# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 ஆகஸ்ட் 16–31 தொகுதி 25 இதழ் 2

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


ஜந்தர் மந்தர் மாணவர் - இளைஞர் போராட்டத்தின் முடிவு!

## மோடி ஆட்சி வீழ்ச்சியின் துவக்கம்!



## ஜந்தர்மந்தர் மாணவர்–இளைஞர் போராட்டத்தின் முடிவு!

# மோடி ஆட்சி வீழ்ச்சியின் துவக்கம்

## கருத்தரங்கம்




ஜூலை 20 அன்று ஜந்தர் மந்தரில் மாணவர்-இளைஞர்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டு சரியாக ஒரு மாதம் கழித்து ஆகஸ்டு 20 அன்று இரண்டு பேர் தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்த்தனர். ஒருவர் 'நீட்' க்கு எதிராக ஜந்தர்மந்தரில் 23 நாள்கள் பட்டினிப் போர் நடத்திய, அகில இந்திய மாணவர் கழகத்தின் தேசியத் தலைவர் தோழர் நேகா. மற்றொருவர் அங்கு கூடியிருந்த இலட்சக்கணக்கான மாணவர், இளைஞர், பெண்கள் மீது ஆணி வைத்த தடிகள், பெல்லட் குண்டுகள் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் காரணமாக இருந்து, நாடாளுமன்றத்திற்குப் பதில் சொல்லாமல் ஓடிக் கொண்டிருக்கும் உள்துறை அமைச்சர் அமித்ஷா. தென் மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டிற்கு அமித்ஷா வரும் அதே நாளில், நேகாவும் மாணவர்-இளைஞர்களை சந்திக்கிறார் என்பதால், தமிழ்நாடு தவெக அரசு சிவப்பு எச்சரிக்கை விடுத்தது மட்டுமின்றி கல்லூரிக் கல்வித் துறை சார்பாக, கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நடத்தும் போராட்டங்களுக்கு, கூட்டங்களுக்கு மாணவர்கள் செல்லாமல் இருப்பதை தடுக்க வேண்டும் எனச் சுற்றறிக்கையே விட்டது. அது எதிர்ப்புகள் கிளம்பியவுடன் திரும்பப் பெறப்பட்டுவிட்டது என அமைச்சர் அறிவித்தார்.

இந்தச் சூழ்நிலையில், அகில இந்திய மாணவர் கழகம், புரட்சிகர இளைஞர் கழகம், ஜனநாயக வழக்கறிஞர் சங்கம் இணைந்து, சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள பேச்சுரிமை அரங்கத்தில், 20.08.2026 அன்று மாலை 'ஜந்தர் மந்தர் மாணவர்-இளைஞர் போராட்டத்தின் முடிவு, மோடி ஆட்சி வீழ்ச்சியின் துவக்கம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தின. கருத்தரங்கத்திற்கு அகில இந்திய மாணவர் கழகத்தின் தமிழ்நாடு மாநில ஒருங்கிணைப்பாளர் ராகுல் தலைமை தாங்கினார். புரட்சிகர இளைஞர் கழகத்தின் மாநிலத் தலைவர் எம்.சுந்தர்ராஜன் துவக்கவுரையாற்றினார். அகில இந்திய மாணவர் கழகத்தின் தேசியத் தலைவர் நேகா சிறப்புரையாற்றினார். அவருடைய ஆங்கில உரையை எழுத்தாளர் வ.கீதா மொழி பெயர்த்தார். முன்னதாக, ' இளைய இந்தியா வெல்லும், இந்தியப் பாசிசத்தைக் கொல்லும்!' குறு நூலை தோழர் நேகா வெளியிட்டார்.

கருத்தரங்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு - உழைப்போர் உரிமை இயக்கம் மாநிலத் தலைவர் கு.பாரதி, புரட்சிகர இளைஞர் கழக மாநிலப் பொதுச் செயலாளர் தனவேல், வழக்கறிஞர் புளியந்தோப்பு மோகன், நீட் எதிர்ப்பு கூட்டியக்கத்தின் மணிரத்தினம், சமத்துவ வழக்கறிஞர் சங்கத்தின் பார்வேந்தன் ஆகியோர் உரையாற்றினர். ஜனநாயக வழக்கறிஞர் சங்க வழக்கறிஞர் எம்.சங்கர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். வழக்கறிஞர் கண்ணன் நன்றி கூறினார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் தியாகு, மூத்த ஊடகவியலாளர் தெ.சீ.சு.மணி, பாலகிருஷ்ணன்(எஸ்கேஎம்), செல்வா(சிபிஐஎம் தென் சென்னை மாவட்டச் செயலாளர்), மூத்த மருத்துவர்கள், மார்க்சிய லெனினிய ஆர்வலர்கள் என நிறமாலையாக திரண்டிருந்தனர். இகக(மாலெ) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் எஸ்.குமாரசாமி, மத்தியக் குழு உறுப்பினர் பாலசுந்தரம், தீப்பொறி ஆசிரியர் ஜி. ரமேஷ், ஒருமைப்பாடு ஆசிரியர் புவனா, அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கத்தின் ஜானகிராமன், அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் அய்யந்துரை, போராட்டத்தில் கலந்து கொண்டதால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் உள்பட இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக அமைப்புகள், மாணவர், இளைஞர், வழக்கறிஞர், பெண்கள் அமைப்புகளின் தலைவர்கள், ஆளுமைகள், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மக்கள் நலன் காக்கும் அரசா? கண்காணிக்கும் அரசா?

லஞ்சம், ஊழல் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் முழுமையான சுதந்திரம், முதன்மையானது, மேலும் போதைப் புழக்கம் இல்லாத தமிழ்நாடு, பெண்கள் பாதுகாப்பு, சமூக நீதி, வெளிப்படையான நேர்மையான நிர்வாகம் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு தனது அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தனது முதல் சுதந்திர நாள் உரையில் முதல்வர் விஜய் பேசினார். பொது வாழ்வில் சமரசம் இருக்கக் கூடாது. மக்கள் நலன்தான் முக்கியமானது. மக்கள் நலன் சார்ந்த திட்டங்களில், மத்திய அரசுடன் நிர்வாக ரீதியாக ஒத்துழைப்புடன் இருக்கிறோம், அதேவேளையில், மாநில உரிமைகளுக்கும் தமிழகத்திற்கும் எதிரான கொள்கை முடிவுகளை தவெக அரசு கடுமையாக எதிர்க்கும் என்றார்.

இவ்வாறு பேசிய இரண்டே நாளில் திருவொற்றியூரில், போதைப் பொருள் நடமாட்டத்தைத் தெரியப்படுத்தியதற்காக மாணவர் தனுஷ் முப்பது பேர் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டார். அமைச்சர் ராஜ்மோகனோ அது கோஷ்டி மோதல் என்று திசை திருப்புகிறார். போதைப் பொருள் ஒழிப்புக்காக 65 சிறப்பு அதிரடிப்படை அமைத்த பின்தான் இது நடந்துள்ளது. அமைச்சர் ஆதவ்வோ, திமுக அரசு போதைப் புழக்கத்தை கடந்த ஆண்டுகளில் கட்டுப்படுத்தாததால்தான் இது நடக்கிறது என்று பழி போட்டுத் தப்பிக்கப் பார்க்கிறார். தவெக அரசின் நூறு நாள் ஆட்சியில், முந்நூறுக்கும் மேல் படுகொலைகள். சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படை வந்த பின்னரும், பாலியல் குற்றங்கள் இன்னும் அதிகரித்துள்ளன. சிங்கப் பெண்களோ, பள்ளி, கல்லூரி மாணவிகளுக்கு, பார்த்து நடந்து கொள்வது பற்றி பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். போதை, பாலியல் குற்றங்களைத் தடுக்க குற்றவாளிகளைக் கைது செய்வதில் காட்டும் அக்கறையைக் காட்டிலும் அரசின் செயல்பாட்டைக் கேள்வி கேட்பவர்களை, தங்கள் கோரிக்கைகாகப் போராடுபவர்களை, எதிர்க்கட்சியினரைக் கைது செய்வதில்தான் அதிக அக்கறை காட்டுகிறது விஜய் அரசு. மூடப்பட்டதாகச் சொல்லும் 717 மதுபானக் கடைகளின் பட்டியல் இதுவரை வெளியிடப்படவில்லை. மாறாக, குடியிருப்புப் பகுதியில் புதிய கடைகள் திறப்பதற்கு எதிராகப் போராடும் மக்களை போலீஸ் அடித்து கைது செய்கிறது.

புதுப் புது சுற்றறிக்கைகள் விடப்படுகின்றன.குஜிலியம்பாறை வட்டாட்சியர், கம்யூனிஸ்ட்டுகளைக் கணக்கெடுக்கச் சொல்கிறார். கல்லூரிக் கல்வித்துறை கம்யூனிஸ்ட்டுகள், கரப்பான்பூச்சிக் கட்சியினர் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்புகிறது. அமைச்சரோ அதிகாரிகள் செய்துவிட்டதாகச் சொல்கிறார். இன்னொரு சுற்றறிக்கை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் கடிதம் எண் 12/A2/2026 நாள் 17.08.2026 மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் வட்டார இயக்க மேலாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்ப்பாட்டம் அல்லது வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்பது கண்டறியப்பட்டால் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்கிறது. இவையெல்லாம் கீழுள்ள அதிகாரிகள் தலைமைச் செயலாளருக்குக் கூடத் தெரியாமல் தாங்களே செய்ய முடியுமா? தலைமைச் செயலாளர் முதல்வரிடம் சொல்லாமலா இதைச் செய்கிறார்? அப்படியென்றால் ஆட்சியை யார் நடத்துகிறார்கள். தனது அரசு மத்திய அரசுடன் நிர்வாக ரீதியாக ஒத்துழைப்புடன் இருக்கும் என்று விஜய் சொன்னதன் பொருள் இதுதானா?

மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்றார் விஜய். தென் முதல்வர்கள் மாநாட்டில், தொகுதி மறுவரையறைக்கு எதிராக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு நேர்மாறாக, மாநிலத்தின் விகிதாச்சாரம் பாதிக்காமல் சட்டரீதியான நடவடிக்கைக்கு தான் ஆதரவு அளிப்பேன் என்கிறார். இது மாநில உரிமையைப் பாதிக்கும் விசயமில்லையா? மேகதாட்டு அணை பிரச்சினையில் தான் அவமானப்பட்டாலும் பரவாயில்லை (மாநில முதல்வர் அவமானப்பட்டால் அது மாநிலத்துக்கே அவமானம்) நான் பெங்களூரு சென்று கர்நாடக முதல்வரைச் சந்திக்கப் போகிறேன் என்று சொன்ன விஜய், தமிழ்நாட்டிற்கு வந்திந்திருந்த கர்நாடக முதல்வர் சிவக்குமாரிடம் பேசினாரா? ஒன்றிய உள்துறை அமைச்சரிடம் ஒன்றிய அரசின் கடமை பற்றி பேசினாரா? அப்படிப் பேசியிருந்தால், சட்டமன்றத்தில், தமிழ்நாட்டு மக்களிடத்தில் அதை தமிழ்நாட்டு முதல்வர் தெரிவிக்க வேண்டுமல்லவா? வெறும் மௌனம்தான் மாநில உரிமைக்கான குரல் போலும். ஆனால், அமித் ஷா வந்து போகும் வரை சிவப்பு எச்சரிக்கை விடப்படுகிறது. ஜந்தர் மந்தர் போராளி நேகாவின் கூட்டத்திற்கு யாரும் போகாமல் இருக்க சுற்றறிக்கை போடப்படுகிறது.

தொடர்ச்சி 11 ம் பக்கம்...

மாலெ தீப்பொறி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் குழுவின்
அரசியல் ஏடு

இருவார இதழ்
2026 ஆகஸ்ட் 16-31
தொகுதி 25 இதழ் 2

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# திமாகி நக்சல்:
# அடங்க மறுக்கும் இந்திய இளைஞர்களால் அரண்டுபோன சர்வாதிகாரி !

ஆகஸ்ட் 15 அன்று, நரேந்திர மோடி செங்கோட்டையிலிருந்து இன்னுமொரு சுதந்திர தின உரையை ஆற்றியுள்ளார், இது அவரது 13 வது ஆகஸ்ட் 15 உரை. 2014ல் அவர் ஆட்சிக்கு வந்தது முதல் சில ஆண்டுகளில், அவரது உரைகள் சில உடனடி உள்நாட்டு விசயங்கள், உலகளாவிய விசயங்கள் பற்றியதாக இருந்தன. இந்திய சுதந்திரத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டே அப்போது குறியாக இருந்தது. 2022 க்குப் பிறகு, குறி நேராக 2047க்கு மாற்றப்பட்டது, இப்போது, அவரது அரசாங்கம்கூட புறக்கணிக்க முடியாத, மக்கள் மனங்களிலுள்ள முதன்மையான கவலைகள் குறித்துகூட வெளிப்படையாகவே அமைதி காக்கிறார். உதாரணமாக, அமைச்சர்கள் ராஜினாமா செய்வது என்பது பாஜகவின் கலாச்சாரத்திலே கிடையாது என்று ஆணவமாகப் பேசிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை பதவி நீக்கம் செய்ய வைத்த வரலாறு காணாத ஜந்தர் மந்தர் போராட்டங்கள் பற்றி மோடியின் 80 நிமிட உரையில் எதுவுமில்லை.

ஆயினும், ஜந்தர் மந்தர் பேய் அவரின் மொத்த உரையையும் விழுங்கிவிட்டது. இப்போது இந்தியாவெங்கும் அனைவரிடத்திலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் ஜென்ஸி சொல்லை ஒரு முறைகூடப் பயன்படுத்தாமல், இளைஞர், இளைஞர் என 52 முறை கூறிவிட்டார். ஆனால், இப்போது ஜென் ஆல்பாவைக் கூட போராடத் தள்ளியுள்ள நொறுங்கிப்போன கல்வி, தேர்வு முறை பற்றி வாய் திறக்கவில்லை. அவர் மங்கிப்போன பழைய வாக்குறுதியையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் இளைஞர்களுக்குத் தந்த ஒரே வாக்குறுதி ஆண்டுக்கு ஒரு கோடி வேலைகளை உருவாக்க செயற்கை நுண்ணறிவுக்கான (AI) பயிற்சி வழங்கப் போகிறாராம். எதார்த்தத்தில், பல்வேறு துறைகளில் AI இன் தாக்கத்தால் வேலைகள் அழிக்கப்பட்டு, பெருமளவில் வேலை இழப்புகள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 25 அரசுப் பள்ளிகள் மூடப்படுவதாக நிதி ஆயோக் கூறுகிறது. ஆனால், மோடி இலவச ஆன்லைன் பயிற்சி குறித்து பேசுகிறார். எஸ்.அய்.ஆர் குறித்தோ, எழுத்துப்பிழைகள், பொருத்தமின்மை என்ற அற்ப காரணங்களைச் சொல்லி பல லட்சக்கணக்கான வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறிப்பது குறித்தோ, பீகார் தேர்தல்களுக்கு முன்பு சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அவர் கூறிய வாக்குறுதி பற்றியோ அவர் எதுவும் பேசவில்லை, ஆனால், குடும்பத்தினர் பற்றிய விவரங்களைப் புதுப்பித்து பதிவேற்றம் செய்து, மக்கள் தொகை கணக்கெடுப்பில் அரசாங்கத்திற்கு உதவுமாறு இளைஞர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஜென்ஸி பற்றியோ ஜந்தர் மந்தர் குறித்தோ எதுவுமே பேசாத மோடி, சங்கிகள், உள்நாட்டு எதிரிகள் என்று பிளவுபடுத்தும் வெறுப்புப் பேச்சு சொற்களில் புதிய சொல் ஒன்றை அறிமுகப்படுத்தினார்: துக்டே துக்டே கும்பல், நகர்ப்புற நக்சல், அந்தோலன்ஜீவி, தேச விரோதி ஆகியவற்றிற்குப் பின்னர், இப்போது "திமாகி நக்சல்" அல்லது அறிவுஜீவி நக்சல். தொடர்ந்து கிரண் ரிஜிஜு, மாவோயிஸ்ட் ஆதரவாளர்களும், 370வது பிரிவை ஆதரிப்பவர்களும்தான் என்று விளக்கமளித்தார். ஆனால், மோடியோ தனது உரையில் இன்னும் பின்னோக்கிச் சென்று, அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி காலத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ஆலோசனை வழங்கிய அறிவுஜீவிகளும் கூட 'திமாகி நக்சல்கள்தான்', என்றார்.

அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்தில் இடதுசாரி முகாம் அதிகாரம் பெற்றிருந்ததையும் மக்கள் நலன் மற்றும் குடிமக்கள் உரிமை, தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், வன உரிமைகள் சட்டம், தகவல் உரிமைச் சட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம், நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத் தன்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியேற்றச் சட்டம் போன்ற சட்டங்களைக் கொண்டு வந்து அவற்றை நடைமுறைப்படுத்திய தேசிய ஆலோசனைக் குழுவின் பங்கையும்தான் சுட்டிக் காட்டினார்.

அந்தச் சட்டங்கள் எல்லாம் உரிமைகள் விரிவாக்கத்திற்கும்,கொள்கைகளைஉருவாக்குவதிலும் அவற்றை நிர்வகிப்பதிலும் குடிமக்கள் தங்கள் கருத்து சொல்வதற்கு அனுமதியளிக்கிறது என்பதுதான் மோடியின் பிரச்சனை. காலனித்துவ காலத்தில் உருவாக்கப்பட்ட 1894 ஆம் ஆண்டு சட்டத்தை மாற்றி, சமூக, சுற்றுச் சூழல் தணிக்கை, ஒப்புதல் பெறுதல், இழப்பீடு வழங்குதல், மறுவாழ்வு மற்றும் மறு குடியேற்றம் ஆகியவற்றைக் கட்டாயமாக்கி நிலம் கையகப்படுத்தல் சட்டம் 2013 உருவாக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டிலேயே, அச் சட்டத்தை மூழ்கடிக்கும் முயற்சியுடன்தான் தனது ஆட்சியை மோடி தொடங்கினார். ஆனால், அதில் அவர் வெற்றி பெற முடியவில்லை. பல ஆண்டுகளாக

தகவல் அறியும் உரிமைச் சட்டம் திட்டமிட்டு பலவீனப்படுத்தப்படுகிறது, வன உரிமைச் சட்டம் வேண்டுமென்றே அமல்படுத்தப்படாமைக்கும் விதி மீறலுக்கும் பலியாகியுள்ளது, இப்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு மாற்றாக, சட்டப்படியான வேலைவாய்ப்பு உத்தரவாதத்திற்கான அனைத்து அடிப்படை அம்சங்களையும் தலைகீழாக மாற்றி ஒரு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இமயமலைப் பிராந்தியத்தில் நிலச்சரிவுகளும், பருவநிலை பேரழிவுகளும் அதிகரித்துக் கொண்டு வரும் நேரத்தில், தேசிய தலைநகர் பிராந்தியத்தில் காற்று மாசு ஆபத்தான விகித்தை எட்டிக் கொண்டிருக்கும் போது, காடுகளை அழிப்பதற்கு எதிராக, இந்திய கடலோரப் பகுதிகள் பலவீனமடைந்து வருவதும், சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல் மீது நடத்தப்படும் தாக்குதல்களுக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் அதிகரித்து வரும் போது, சுற்றுச் சூழல் பாதுகாப்பு விதி மீறல்களை தனது அரசாங்கம் வெளிப்படையாகவே செய்வதில் மோடி பெருமை கொள்கிறார். 99 சதவீத இந்திய கடற்கரைகள் 'தடை செய்யப்பட்ட பகுதி' என்பதிலிருந்து 'முன்னேறிச் செல்லும் பகுதியாக' தமது அரசாங்கம் மாற்றியுள்ளது என்று சொல்லும் மோடி, எவ்வித விளக்கமும் இன்றி, இந்திய கடற்கரையின் பெரும் பகுதியை அதானி குழுமத்திடம் ஒப்படைத்து இந்தியாவின் உள்கட்டமைப்பு மற்றும் துறைமுகங்கள் மீதான அதானி பிடியை வலுப்படுத்தச் செய்துள்ளார்.

திமாகி நக்சல் என்ற சொல் சமூக, கலாச்சார மற்றும் அரசியல் விஷயங்களில் அறிவாற்றல் கொண்ட மூளையின், அறிவுஜீவிகளின் 'திமாக்' அல்லது மூளையின் முக்கிய பங்கைக் குறிக்கிறது, இதைக் கண்டு மோடி அரசாங்கம் ரொம்பவே பயப்படுகிறது. எல்லா வகையிலும் அதைத் தடுத்து நிறுத்த விரும்புகிறது. இந்தச் சொல் உருவாக்கப்படுவதற்கு முன்னரே, நரேந்திர தபோல்கர், கோவிந்த் பன்சாரே, எம்.எம்.கல்புர்கி, கௌரி லங்கேஷ் போன்ற எழுத்தாளர்கள் படுகொலை செய்யப்பட்டதையும், இந்தியாவின் புகழ்பெற்ற அறிவாளிகள், கலாச்சார ஆளுமைகள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோர் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டு, திட்டமிட்டு துன்புறுத்தப்பட்டு வருவதையும் நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

மோடி தனது சுதந்திர நாள் உரையில், திமாகி நக்சல்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தது, நாடெங்கிலுமுள்ள அரசுக்கு எதிரான எதிர்ப்புக் குரல்களை, செயற்பாட்டாளர்களை அரசும் சங்கிகளும் குறி வைத்துத் தாக்குவதற்காக தீய நோக்கத்துடன் சொல்லப்பட்ட மறைமுகச் செய்தியாகும். "குடிமைப் பாதுகாப்பிற்கான துடிப்பு மிக்க வலைப் பின்னலை" உருவாக்குவதற்கு மோடி கொடுக்கும் அழுத்தமானது, அநேகமாக, மக்கள் மீது அதிக அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடவும் மக்கள் போராட்டங்களை, இயக்கங்களை ஒடுக்கு வதற்காக ஓய்வு பெற்ற அக்னி வீரர்களைப் பயன்படுத்தி அரசு-தனியார் கூட்டு அமைத்து ஒரு புதிய படையை உருவாக்குவதற்கும் சங்கிக் குண்டர் படைகளை சட்டபூர்வமாக்குவதற்குமான ஒரு சமிக்ஞையாக இருக்கலாம். மக்கள் மூளைகளைக் கண்காணிக்கும் இந்த அபத்தமான யோசனையானது, மக்கள் மனங்களைக் கட்டுப்படுத்துவது, அவர்களின் உணர்ச்சிகளுடன் விளையாடுவது மற்றும் அவர்களின் வெளிப்பாடுகளை ஒழுங்குபடுத்துவது போன்ற சங்கிகளின் நடைமுறையிலிருந்து வருகிறது. இந்த 'சிந்தனை காவல்' என்பது அச்சமூட்டும் வகையில் ஜார்ஜ் ஆர்வெல் எழுதிய '1984' என்கிற நாவலில் வரும் கொடுங்கோன்மை மனப் பிறழ்ச்சியுடன் ஒத்திருக்கிறது.

மேற்கு வங்கத்தின் பாங்குரா மாவட்டத்தில் ஷேக் முகமது ஹபீஸ் மீது பாஜக குண்டர்கள் நடத்திய தாக்குதலும், தங்கள் கிராமத்தில் உள்ள ஒரு தொடக்கப் பள்ளியின் பரிதாபகரமான நிலைமைகளை அம்பலப்படுத்தியதற்காக அவரது தந்தை முகமது மாஃபிக் கொலை செய்யப்பட்டதும், இந்தியா முழுவதிலும் உள்ள இளைஞர்களுக்கு உந்து சக்தியாக மாறியுள்ள ஐந்தர் மந்தரின் துணிவுமிக்க உணர்வை, எழுச்சியை, எதிர்ப்பை நசுக்குவதற்கு பாஜகவும் சங்கிக் கூட்டங்களும் ஒருங்கிணைந்து திட்டமிட்டு வரும் வன்முறை மற்றும் பயங்கரத்தின் வகை மாதிரியைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால், கரப்பான் பூச்சி போன்றதொரு இழிவான, மனிதாபிமானமற்ற ஒரு சொல்லை பெருமையின் அடையாளமாக, எதிர்ப்புத் தளமாக மாற்றியுள்ளது ஒரு தலைமுறை. அதை நிச்சயமாக மோடியின் 'திமாகி நக்சல்' எனும் வஞ்சகச் சொல்லால் அச்சுறுத்தவோ அல்லது தடுத்து நிறுத்தவோ முடியாது.

பாசிஸ்டுகள் தொடர்ந்து உள்நாட்டு எதிரிகளைத் தேடுகிறார்கள், எதிரியை அடையாளம் காண ஒரு புதிய சொல் தேவையாகியுள்ளது என்பதானது அவர்களின் முந்தைய சொற்களஞ்சியம் வேலைக்காகவில்லை என்பதின் ஒப்புதலே ஆகும். நக்சலிசம் என்பது கம்யூனிசத்தின் இந்திய துணைச் சொல் மட்டுமே. 'திமாக்' அல்லது மூளையை நக்சலிசத்துடன் இணைப்பதன் மூலம், பாசிச ஆக்கிரமிப்பு, நிர்வாகத் தோல்வி மற்றும் கார்ப்பரேட் கொள்ளை ஆகியவற்றின் இன்றைய சூழலுக்கு எதிராக கம்யூனிச கருத்துகள் வளர்ந்து வருவதையும் அவற்றின் எதிரொலிப்பையும் மோடி ஒரு வகையில் ஒப்புக் கொண்டுள்ளார். அறிவாற்றலும் மனசாட்சியும் மதவெறியை, குருட்டு நம்பிக்கையை வெற்றி கொள்ளட்டும். மனம் உண்மையிலேயே பயமின்றி இருக்கட்டும்.

**எம்எல் அப்டேட் - தலையங்கம் 18-24 ஆக.2026**

**தமிழாக்கம் – சங்கந்தம்பி**

# இந் நாட்டை இளைஞர்களாகிய நாம் ஆள்வோம்! பாசிசம் வேரோடு வேரடி மண்ணோடு தூக்கியெறியப்படும்

## 'ஜந்தர்மந்தர் போராட்டத்தின் முடிவு மோடி ஆட்சியின் வீழ்ச்சியின் துவக்கம்'

**கருத்தரங்கில் தோழர் நேகா பேசியதன் சுருக்கம்**

எனக்கு தமிழ் தெரியாது. அதற்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். தெரிந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் உங்களுடன் பேசுவதற்கு.

இன்று 20ஆம் தேதி. கடந்த மாதம் 20–ஆம் தேதி பட்டினிப் போராட்டத்தின் 23ம் நாள். அன்று எங்களுடைய பட்டினிப்போராட்டத்தை கலைத்தெறிந்தார்கள். சரியாக ஒரு மாதம் கழித்து நான் இங்கு உங்கள் முன் நின்று கொண்டிருக்கிறேன்.

இங்கு நீட் தேர்வுக்கு எதிராக பட்டினிப் போராட்டம் நடத்திய தோழர்கள் மணி, மோகன், தனசேகர், ஆகியோருடன் இங்கு இருப்பதில் மகிழ்ச்சி.

இந்த நேரத்தில் அனிதாவுக்கு உண்மையில், அவருடைய சகோதரர் மணியின் போராட்டத்திற்கு என்னுடைய மரியாதையைச் செலுத்துகிறேன். எனக்கும் ஒரு தம்பி இருக்கிறான், அந்த தம்பிக்கு ஏதாவது நடந்தால் நான் என்னுடைய போராட்டத்தை எப்படித் தொடர்வேன் என்று எனக்குத் தெரியாது. உங்கள் அனைவருக்கும் எனது புரட்சிகர வணக்கங்கள், ஜெய்பீம், செவ்வணக்கம்.




கல்வி அமைப்பு பற்றி பேசும் போது அதைமேம்படுத்துவதைப்பற்றிப்பேசுகிறோம். ஒரு பாசிஸ்ட்டிற்குப் பதிலாக இன்னொரு பாசிஸ்ட்டை மாற்றுவதல்ல. ஒட்டுமொத்தமாக மாற்றியமைக்க வேண்டும். எந்த பாசிஸ்ட் வந்து கல்வித்துறைக்கு அமைச்சராக வந்தாலும் நம்முடைய எதிர்காலம், இந்த நாட்டின் எளிய மாணவர்களின் எதிர்காலம் அங்கு பணயமாக வைக்கப்படுகிறது. நம்முடைய வாழ்க்கைதான் ஒவ்வொரு நாளும் பறிக்கப்படுகிறது.

2017–2018லிருந்து, இருந்து கொண்டி ருக்கிற தேசிய தேர்வு முகமை, சட்டவிரோத வினாத் தாள் கசிவை சட்டபூர்வமானதாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

நம் நாட்டில், நம்முடைய கல்வி மொத்தமாக விற்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வினாத் தாள் கசிவிற்கு யாரெல்லாம் பொறுப்போ அவர்களையே அது பற்றி விசாரணை செய்யும் குழுக்களில் என்.டி.ஏ. சேர்த்துக் கொண்டுள்ளது. அந்த நபர்கள் எல்லாம் பாரதிய ஜனதா யுவ மோர்ச்சாவைச் சேர்ந்தவர்கள். என்.டி.ஏ 24 நிரந்தர ஊழியர்களை வைத்துக் கொண்டு 2 கோடி மாணவர்களுக்கான தேர்வுகளை நடத்துகிறது. அவர்கள் தனியார் ஏஜென்சிகளுக்கு காண்ட்ராக்ட் கொடுத்து, திட்டமிட்டு முறைகேடுகளும் தொழில்நுட்பக் கோளாறுகளும் நடக்கின்றன.

அடுத்து, புதிய கல்விக் கொள்கை. கல்வி மாணவர்களின் அடிப்படை உரிமை என்ற நிலையிலிருந்து மாற்றி, கல்வியை வியாபாரமாக, லாபத்திற்கானதாக ஒரு சரக்காக மாற்றியுள்ளது. கல்வி கொடுக்கும் கடமை அரசுக்கு கிடையாது என்கிறது.

என்.டி.ஏவும் என்.இ.பியும் மாணவர்களுக்கு கல்வியை கேள்விக்குள்ளாக்கி விட்டது. மாணவர்கள் சி.பி. எஸ்.இ அல்லது தனியார் பள்ளிகளில் சேர வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மாநிலப் பாடத்திட்டப் பள்ளிகளுக்கு எந்த மதிப்பும் இல்லை.

பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்குத் தேவையான நிதியை அரசு வழங்காமல், கடன் வாங்கி நடத்தச் சொல்கிறார்கள். அந்தக் கடனை அடைக்க கட்டணத்தை உயர்த்துகிறார்கள், உட்கட்டமைப்புச் செலவுகளைக் குறைக்கிறார்கள், மாணவர்களுக்கு அதிக அபராதம் விதிக்கிறார்கள், கல்வி உதவித்தொகையை ரத்து செய்கிறார்கள்.

நீட் போன்ற கட்டாயத் தேர்வுகளால் தனியார் பயிற்சித் தொழிற்சாலைகள் பல கோடி ரூபாய் லாபம் பார்க்கின்றன. நம்முடைய பணத்தில். தனியார் பள்ளி முதலாளிகளும், தனியார் பயிற்சி மய்ய மாஃபியாக்களும் கொழுக்கிறார்கள்.

இந்திய அரசியல் வழிமுறைகளிலும் இதே கொள்கைதான். இந்த நாடு யாருக்காக உள்ளது? இந்து ராஷ்டிரா என்பது யாருக்காக? சில ஆதிக்க சாதியைச் சேர்ந்த, சில ஆதிக்க சாதி இந்துக்களுக்காக உள்ளது. சாதி அமைப்பை ஏற்காதவர்கள், சாதியை விட்டு, மதத்தை விட்டு தங்களுக்கான வழியைத் தேர்ந்தெடுத்திட முடியுமா? பார்ப்பனிய ஆணாதிக்கக் கட்டமைப்பை எதிர்க்கும் பெண்கள், மாற்றுப் பாலினத்தவர் என ஒடுக்கப்பட்டவர்களின் நிலைமைகள் மோசமாக உள்ளன.

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் நீத்த ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் தொடர்ந்து குறிவைத்துத் தாக்கப்படுகிறார்கள். ஆதிவாசி மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு, வாழ்வாதாரம் அழிக்கப்பட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்குத் தாரைவார்க்கப்படுகின்றன.

ஆஷா பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நோய்டா, மானேசர், குர்கானில் போராடிய 'கிக்' தொழிலாளர் போராடியதற்காக சிறை வைக்கப்பட்டார்கள். அந்நிய நேரடி முதலீட்டிற்காகவும், சிறப்புச் சுரண்டல் மண்டலங்களுக்காகவும் தொழிலாளரின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளான மக்கள் வளர்ச்சிக்கு எதிரானவர்களாக, குடியுரிமைச் சட்டத்திற்கு எதிரான போராளிகள் பாகிஸ்தானியர்களாக, விவசா யிகள் போராட்டத்தில் உயிரை விட்ட 700 பேரும் காலிஸ்தா னியர்களாக முத்திரை குத்தப்படுகிறார்கள்.

மோடியின் இந்தியாவில் ஒரு சிலர் லாபமடைய, நாட்டு மக்களாகிய நாம் எல்லாம் உரிமைகளையும் கவுரவத்தையும் இழக்க வேண்டும். இதை ஜென் ஸீ தலைமுறையினர் கேள்விக்குட்படுத்துகிறார்கள்.

எங்களுடைய போராட்டம் உங்களை சங்கடப்ப டுத்தியது, எங்களுடைய போராட்டமும் வார்த்தைகளும் உங்களை இரண்டு முறை சிந்திக்க வைத்துள்ளது, எங்கள் பட்டினிப் போராட்டம், நாட்டு மக்கள் மீது நீங்கள் அக்கறையின்றி இருக்கிறீர்கள் என்பதை அம்பலப்படுத்தியது. இந்நாட்டின் வரலாற்றில் மிக மோசமான அரசாங்கம் உங்களுடையதுதான் என்பதை வெளிக் கொணர்ந்த பெருமை எங்களையே சாரும்.

தர்மேந்திர பிரதான் பதவி விலகியபோது, 'இந்தப் போராட்டம் பாசிச ஆட்சியின் முடிவின் துவக்கமாக நினைவு கூரப்பட வேண்டும்' என்று என்னிடம் கேள்வி கேட்ட ஊடக நண்பரிடம் சொன்னதையே இன்று இங்கேயும் சொல்கிறேன்.

அவர்கள் நம்மை எல்லா வழிகளிலும் பிளவுபடுத்து கிறார்கள். நம்மை தென்னிந்தியா, வட இந்தியா என்று பிளவுபடுத்துகிறார்கள். 'நீட்'க்கு எதிரான போராட்டத்தில் மட்டுமின்றி, கூட்டாட்சியைப் பாதுகாக்க, ஒரே கலாச்சாரம், ஒரே மொழிக்கு எதிராக, தென் மாநிலங்கள் மீது திணிக்கப்படும் தொகுதி மறுவரையறைக்கு எதிராக நீங்கள் நடத்தும் போராட்டங்களில் நாங்கள் உங்களுடன் நிற்போம்.

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற வேறுபாடின்றி, இந்திய இளைஞர்களாகிய நாம் சாம்பலில் இருந்து ஒரு புதிய இந்தியாவைக் கட்டமைப்போம். இந் நாட்டை இளைஞர்களாகிய நாம் ஆள்வோம்! பாசிசம் வேரோடு வேரடி மண்ணோடு தூக்கியெறியப்படும். மிக்க நன்றி!

## நரேந்திர மோடி அரசு வீழ்ச்சியினுடைய துவக்கம் ஆரம்பமாயிடுச்சு.

### ஏஐசிசிடியு—உழைப்போர் உரிமை இயக்கம் மாநிலத் தலைவர் தோழர் கு.பாரதி பேசியதிலிருந்து

*....முதலாளித்துவ சமூகத்தினுடைய கட்டமைப்பில் இளைய சமூகம் எல்லாம் இன்ஸ்டாகிராம்ல இருப்பாங்க, அதில் நிறைய நேரம் செலவு பண்ணுவாங்க, நிறைய புத்தகம் படிக்க மாட்டாங்க, களத்துக்கு வர மாட்டாங்க, போராட மாட்டாங்க, எல்லாம் முடிஞ்சிருச்சு. அந்தக் கால நக்சல்கள், அந்தக் கால கம்யூனிஸ்டுகள், அந்தப் பாரம்பரியம் எல்லாம் முடிஞ்சு போச்சு, திருப்பி வந்து நியூ ஜெனரேஷன் எதுவும் பண்ணாது என்று இருந்தபோது-அதற்கெல்லாம் பதிலடியாகத்தான் டெல்லியில ஜந்தர் மந்தர்ல மாணவர் சமூகம், இளைஞர் சமூகம், "நாங்கள்தான் நாளைய இந்தியா! மோடி அரசுக்கான வீழ்ச்சி துவங்கி இருக்கிறது!" என்று ஒரு மிகப்பெரிய எழுச்சி. Gen-Z தலைமுறையினுடைய எழுச்சி நாடு முழுக்க... நாடு முழுக்க மாணவர்களுடைய நம்பிக்கை. அங்க ஒலிச்சது 'ஜெய் பீம்' என்ற குரலும், 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்ற குரலும் இயல்பாகவே சேர்ந்து ஒலிச்சுது. "இது ஒட்டுமொத்த மாணவர் இளைஞர்களுடைய போராட்டம்" என்று அறிவித்தது. அதுதான் அந்த போராட்டத்தினுடைய வெற்றியாக இருந்தது. அச்சம், பயம் நரேந்திர மோடிக்கே துவங்கி இருக்கு. போராடுபவர் மீது 'நக்சல்' என்று முத்திரை குத்துறான்னு சொன்னா, இன்னைக்கும் டெல்லியினுடைய போராட்டத்துல இருந்து அவர் வெளிய வரல. உலகம் முழுக்க கம்யூனிஸ்டுகள் இருக்காங்கன்னா, இது உலக முழுமைக்கான சித்தாந்தம்.இன்னைக்கு ட்ரம்ப், "உலகத்துல நடக்குற போர்களை விட, பயங்கரவாதத்தை விட ஆபத்தானது கம்யூனிசம்" என்று பேசுறார். ஏன்னா, உலகம் முழுக்க போருக்கு எதிராக,*




*ட்ரம்புக்கு எதிராக, சர்வாதிகாரத்திற்கு எதிராக இடதுசாரிகள், கம்யூனிஸ்டுகள் எழுந்து, களத்துலயும் நிக்கிறாங்க. இது இந்தக் கட்சி, அந்தக் கட்சி சம்பந்தப்பட்டது இல்ல, சித்தாந்தம் சம்பந்தப்பட்டது. அதனாலதான் ட்ரம்புக்கு அச்சம் இருக்கு. ட்ரம்புக்கு அச்சம் இருக்குன்ற மாதிரி, மோடி கூட்டத்துக்கும் அச்சம் இருக்கு. மோடி கூட்டத்துக்கு அச்சம் இருக்குன்ற மாதிரி, தமிழ்நாட்டில் ஜோசப் விஜய் கூட்டத்துக்கும் அச்சம் இருக்கு!.... நரேந்திர மோடி அரசு வீழ்ச்சியினுடைய துவக்கம் ஆரம்பமாயிடுச்சு. விவசாயிகள் தொடங்கி வச்சாங்க. இன்னைக்கு சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் தயவுல மட்டும்தான்... அவங்க தயவுலதான் இன்னைக்கு தொங்கிட்டு அப்படியே நிக்குது. அடுத்த முறை நிச்சயமாக மோடி, அமித் ஷா கூட்டத்தை மாணவர், இளைஞர் கூட்டம் நிச்சயமாக வீதிக்கு அனுப்பும். அதில் டெல்லி ஜந்தர் மந்தரினுடைய போராட்டமும் இருக்கும்.*

## தோழர் நேஹாவைத் தூக்க முடியவில்லை. அவர் உறுதியாக போராட்டத்தைத் தொடர்ந்தார்.

### சிபிஐ(எம்எல்) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி உரையிலிருந்து..




இன்றைக்கு நம்மை சூழ்ந்திருக்கிற மிகப்பெரிய ஆபத்து பாசிசம். இந்தப் பாசிசம் உலகத்தில் உருவானபோது, முதலில் கண்டறிந்தவர்கள் இடதுசாரிகள், கம்யூனிஸ்ட்டுகள். அதற்கு முடிவுரையை எழுதியவர்களும் கம்யூனிஸ்டுகள்தான்.

சிபிஐ(எம்எல்) கட்சியின் மறைந்த பொதுச்செயலாளர் அன்புத் தோழர் விநோத் மிஸ்ரா அவர்கள் ‘பாசிசத்தின் காலடிச் சத்தம் காதுகளில் கேட்கிறது’ என்று 90களிலிலேயே சொன்னார். இன்று பாசிசம் ஆட்சியில் அரியணையில் அமர்ந்துகொண்டு, கோலோச்சியிருக்கிறது.

இந்த அரங்கத்தில் இன்றைய மாணவர் இளைஞர் மட்டுமல்ல. முன்னாள் மாணவர், இளைஞர்களும் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் அன்றிலிருந்து இன்று வரை போராடிக் கொண்டே இருப்பவர்கள். டெல்லி ஜந்தர் மந்தர் போராட்டத்திற்கான இடம். பல போராட்டங்கள் அங்கே நடந்துள்ளன. ஆனால், இந்தப் போராட்டம் அதிலிருந்து கொஞ்சம் வினோதமானது. இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எல்லாம் ஒரே அமைப்பைச் சார்ந்தவர்கள் அல்ல. இந்த நாட்டின் இளையவர்களும் புதியவர்களும் இந்த ஆட்சியாளர்கள் மீது கொண்ட மிகப்பெரிய கோபத்தால், பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் ஒன்றாக இணைந்தார்கள். போராட்டத்தை கொண்டாட்டமாக்கினார்கள்.

பல சர்வாதிகாரிகளுடைய மணிமகுடங்களை மண்ணில் உருட்டியவர்கள், புரட்டியவர்கள், வீழ்த்தியவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக, பாசிச ஆட்சிக்கு எதிராக, மக்களைப் பிளவுபடுத்துகிற பிளவுவாத அரசியலுக்கு எதிராக எங்கு போராட்டம் நடந்தாலும் அங்கு கம்யூனிஸ்ட்டுகள் நிற்பார்கள்.

இன்றைக்கு அந்தப் போராட்டத்திலே 23 நாட்கள் பட்டினிப் போராட்டத்தை தொடர்ந்த அன்புத்தோழர் நேஹா இங்கே வந்திருக்கிறார். சோனம் வாங்சுக்கை தூக்கிக் கொண்டு போனார்கள். ஆனால், தோழர் நேஹாவைத் தூக்க முடியவில்லை. அவர் உறுதியாக போராட்டத்தைத் தொடர்ந்தார். ஏனென்றால் அவர் கம்யூனிஸ்ட். அவர் அய்சாவின் தலைவர்.

இடதுசாரிகள் ஒன்று சேர்வோம், பாசிசத்தை வீழ்த்துவோம். அதற்கான ஒரு முன்னறிவிப்பாக இந்தக் கூட்டம் இருக்கட்டும்.

## தமிழ்நாட்டின் கல்லூரிகளில் அய்சா

அய்சா தேசியத் தலைவர் நேகா அவர்களின் ஜென்ஸி எழுச்சி பரப்புரை இயக்கத்தை ஒட்டி ஆகஸ்ட் 20 அன்று சென்னை வந்திருந்தார். அன்று, “ஜந்தர் மந்தர் மாணவர்-இளைஞர் போராட்டத்தின் முடிவு - மோடி ஆட்சி வீழ்ச்சியின் துவக்கம்” என்ற மாணவர் இளைஞர் கருத்தரங்கம் பேச்சுரிமை அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்து, அகில இந்திய மாணவர் கழகம்- புரட்சிகர இளைஞர் கழகம் துண்டறிக்கைகளுடன் கல்லூரிகளுக்குப் படை எடுத்தது.

அவற்றிலிருந்து சில காட்சிகள்:

புரட்சிகர இளைஞர் கழக மாநிலத் தலைவர் தோழர் எம்.சுந்தர்ராஜ் தலைமையில் திருநெல்வேலி சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு அழைப்பு விடுத்து துண்டறிக்கை வழங்கப்பட்டது. இதில் பேச்சிமுத்து, இசக்கிராஜா, சங்கரபாண்டி, முருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் துண்டறிக்கை விநியோகித்து பரப்புரை நடைபெற்றது. இதில் எம்.சுந்தர்ராஜ், கா.கணேசன், தோழர்கள் அன்புச்செல்வி, எஸ்.சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி காமராஜ் ஆண்கள் கல்லூரி, காமராஜ் பெண்கள் கல்லூரி மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கப்பட்டது. இங்கு மாணவர்கள் மத்தியில் துண்டறிக்கை வழங்கிய தோழர்கள் முருகன், சகாயம், சிவராமன் உள்ளிட்டவர்களிடம் அநாகரிகமாக நடந்து கொண்ட நிர்வாகத்தைக் கண்டித்தும் குரலெழுப்பப்பட்டது. தூத்துக்குடி வஉசி கல்லூரியிலும் மாணவர் மத்தியில் பரப்புரை செய்யப்பட்டது.

சீர்காழியில் தோழர்கள் விடுதலை குமரன், பகத்சிங், இராஜேஷ், ஸ்ரீதரன் மாணவர்கள் மத்தியில் துண்டறிக்கை வழங்கி பரப்புரை செய்தனர். மயிலாடுதுறை ஏவிசி கல்லூரியில் தோழர்கள் பகத்சிங், சஞ்சய் பரப்புரை செய்தனர்.

விருத்தாச்சலம் அரசு கலைக் கல்லூரியில் மாணவர் மத்தியில் தோழர்கள் ராஜசங்கர், தனவேல் துண்டறிக்கை விநியோகித்து பரப்புரை செய்தனர்.

கோவை அரசு கலை, அறிவியல் கல்லூரியில் தோழர்கள் மெஜோ, பிலோமினா, பாலசுப்பிரமணியன் துண்டறிக்கை அளித்து பரப்புரை மேற்கொண்டனர்.

திருச்சி மாவட்டம் மணப்பாறை அரசு கலை

அறிவியல் கல்லூரியில் தோழர்கள் ஞானதேசிகன், ராஜ்குமார் ஆகியோர் மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கி பரப்புரை செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், மருதங்கோன்விடுதியில் அரசு கலைக் கல்லூரி மாணவர்களிடம் தோழர் சி.ரெங்கசாமி தலைமையில் பரப்புரை நடந்தது.

கரூர் மாவட்டம் தாந்தோன்றிமலை பகுதியில் உள்ள அரசு கலைக்கல்லூரி மாணவர்களிடம் மா.பால்ராஜ், மு.இராமச்சந்திரன், பொன்னுத்துரை, பா.செந்தில்குமார், வெள்ளையன் துண்டறிக்கை கொடுத்து அழைப்பு விடுத்து உரை நிகழ்த்தினர்.

தேனி, உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரியில் தோழர்கள் உதுமான் அலி, காபின் துண்டறிக்கை விநியோகம் செய்தனர்.

சிவகங்கை கல்லூரியில் காளையார்கோவில் மாணவர்கள் பரப்புரை செய்தனர். தேவகோட்டை கல்லூரியிலும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பலநூறு மாணவர்களிடையே பரப்புரை நடத்தப்பட்டது. தோழர்கள் முத்துராஜா, சிம்சன் உள்ளிட்ட தோழர்கள் பரப்புரை நடத்தினர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி, வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் கலைக்கல்லூரி மாணவர்களிடையே தோழர் ஜானகிராமன் தலைமையில் பரப்புரை மேற்கொண்டனர்.

ஜென் ஸீயால் வெற்றி பெற்றதாக பெருமை பேசிக்கொள்ளும் தவெக அரசு, ஜென் ஸீ தலைமுறை, போராட்டங்களில் கலந்து கொள்வதைத் தடுக்கும் முயற்சியாகவும் மாணவர் அமைப்புகளான அய்சா உள்ளிட்ட அமைப்புகளைத் தடுக்கும் முயற்சியாகவும் அரசு எடுத்த முயற்சிகளை முறியடித்து மாணவர் சந்திப்பு பரப்புரை இயக்கமும் சென்னை கருத்தரங்கமும் வெற்றி பெற்றுள்ளது. ஜந்தர் மந்தர் போராட்டம் தமிழ்நாட்டு மாணவர்- இளைஞர் சமூகம், முற்போக்கு, ஜனநாயக சக்திகளை வெகுவாக ஈர்த்துள்ளது. வலுவான மாணவர் இயக்கத்துக்கான உடனடி அவசியத்தையும் வலியுறுத்துகிறது. ஜென்ஸியால் ஆட்சிக்கு வந்தவர்கள் ஜென் ஸீயைக் கண்டு அஞ்சுவதும் தெரிகிறது.

















# ஏலீ; ஏலீ; லாமா சபக்தானி...

**செம்பா**

ஏலீ, ஏலீ, லாமா சபக்தானி... என் தேவனே என் தேவனே என்னை ஏன் கைவிட்டீர்...? சிலுவையில் அறையப்பட்ட தேவகுமாரன் பிதாவிடம் கேட்டாராம். விவிலியம் சொல்கிறது. தமிழ்நாட்டில் கிறித்துவராகப் பிறந்தவர்கள், பிறக்காதவர்கள் பலருக்கும் இனி இதுதான் மைன்ட் வாய்ஸ்.

அய்யாயிரத்து தொண்ணூற்றி முப்பத்து இரண்டும் நாற்பதாயிரத்து நாற்பத்தி பன்னண்டும் சேர்ந்தால் என்ன கிடைக்குமோ அதுதான் தவெக ஆட்சியின் நிதிநிலை திட்டமிடலில் தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்கும்.

பார்வை இல்லை, பயிற்சி இல்லை என்றால், மாற்றிக் கொள்ள, வளர்த்துக் கொள்ள முடியும். அதற்கான தயார்நிலை இல்லை, ஆட்சி நடத்துவதில் அக்கறை இல்லை என்றால் என்ன செய்ய முடியும்? ஜெயலலிதாவுக்குப் பிந்தைய, 2021க்கு முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் அமைச்சர் பெருமக்கள் பலரும் விதவிதமாக பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். தெர்மகோல் வரை பார்த்தோம். ஆட்சிப் பொறுப்பு என்றால், சொத்து சேர்ப்பது, தீவு வாங்குவது என்பதாக அவர்கள் கருதினார்கள். மக்கள் வாடிப் போனார்கள். இடையில், எல்லாம் நலம் என்று சொல்வதற்கு இல்லை என்றாலும் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடிந்தது. இப்போது மீண்டும் முதலில் இருந்து தொடங்க வேண்டும்.

முந்தைய ஆட்சியின் திட்டங்களுக்கு பெயர் மாற்றி அறிவிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மகிழத்தான் வேண்டும். பயிர்க்கடன் தள்ளுபடி, தாய்மாமன் தங்க மோதிரம், 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம் ஆகியவற்றால் செலவினம் ரூ.12,530 கோடி அதிகரித்துள்ளது என்று அறிக்கையில் சொல்லப்படுகிறது. வாக்குறுதிகள் எங்கே? கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு எல்லாம் மேம்பட என்ன புதிய திட்டங்கள்? தனது நிதி ஆரோக்கியத்தை மீட்டெடுக்கத் தேவையான நிறுவனக் கட்டமைப்பை, மனிதவளத்தை தமிழ்நாடு கொண்டுள்ளது என்று சொல்லும் அறிக்கை அந்த மனித வளத்தை பாதுகாக்க, மேம்படுத்த என்ன செய்யப் போகிறது? உரிமைத் தொகை ரூ.2500 ஆகவில்லை. இளைஞர்களுக்கு வேலையில்லா காலப்படி ரூ.4000 பற்றி பேச்சு இல்லை. சமையல் எரிவாயு உருளை ஆண்டுக்கு ஆறு என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆனாலும் ஆரவாரத்துக்குப் பஞ்சம் இல்லை.

சூப்பர் சிஎம், சூப்பர் ஸ்டூடன்ட், சூப்பர் கேம்பஸ்.... அதாவது தூய்மையான, அனைத்து வசதிகளும் கொண்ட பள்ளி வளாகங்கள் அமைக்கப் போர்கிறார்களாம். இதற்கு 10,000 பள்ளிகளுக்கு ரூ.139 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு பள்ளிக்கு ஓராண்டுக்கு வெறும் ரூ.13,900. விஜய்ணா, அந்தப் பள்ளிகளை சுத்தம் செய்யும் தூய்மைப் பணியாளர்களுக்கு என்ன சம்பளம் தருவீர்கள்? 10,000 பள்ளிகளை தூய்மைப்படுத்தி விட்டு மற்ற பள்ளிகளை என்ன செய்வீர்கள்?

நவீனமயமாக்கத்துக்கு பள்ளி நிறைவுத் திட்டம், 3734 பள்ளிகளில் ரூ.2132 கோடியில் நிறைவேற்றப்படும். ஒரு பள்ளிக்கு ஆண்டில் ரூ.57 லட்சம். 13,900அய் விட 57 லட்சம் கொஞ்சம் ஆறுதல்தான்.

திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டு இயங்கி வரும் மாடல் பள்ளித் திட்டத்துக்கு பெயர் மாற்றம் செய்து ரூ.125 கோடி செலவு செய்யப்படுமாம்.

பள்ளிப் பாடத்திட்டத்தை மறுசீரமைக்க ரூ.25 கோடி. அடிவயிற்றில் புளி கரைக்கிறது. இந்த மறுசீரமைப்பை யாரிடம் ஒப்படைக்கும் இந்த அரசு? ஜோசியம், ஜாதகம், பத்தாவது மாடி நல்லதா, கடல் பார்த்து இருக்க வேண்டுமா போன்ற அம்சங்கள் கொண்டதாக பள்ளிப் பாடத் திட்டம் மாறுமா? நல்ல வேளையாக தமிழ்நாடு ஏற்கனவே வங்கக் கடல் பார்த்துத்தான் இருக்கிறது. இந்த ஆண்டு பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு ஹெல்மெட்டுடன் சைக்கிள். எல்லாம் சேர்த்து பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.44,527 கோடி ஒதுக்கப்படுகிறது.

ரூ.3200 கோடி மதிப்பீட்டில் 200 ஒருங்கிணைந்த மாணவர் விடுதிகள் அரசு – தனியார் கூட்டு முயற்சியில் கட்டப்படும். வரும் இரண்டு நிதியாண்டுகளுக்கு 20% கட்டுமான மானியம் ரூ.640 கோடி. இந்த இடத்திலும் மின்கல ஆற்றல் சேமிப்பு, மின்பகிர்மானப் பாதைத் திட்டம் ஆகியவற்றில் தனியார் ஊக்குவிப்பு என்று சொல்லும் போதும் மான்டெக் சிங் அலுவாலியா கண்ணில் தெரிகிறார். 300 மாணவர்களுடன் வருகிற கல்வி ஆண்டில் தொடங்கப்படும் சட்டக் கல்லூ சேர்த்து, உயர்கல்வித் துறைக்கென ரூ.8,393 கோடி ஒதுக்கப்படுகிறது.

தொழிலாளர் நலன் என்ற தலைப்பில் அடுத்த அய்ந்து ஆண்டுகளில் 12500 வாகன மெக்கானிக்குகள் உட்பட 22500 பேர் பயன் பெறும்விதம், மின்வாகன பழுது, பராமரிப்பு பயிற்சி பெறுவார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நிதியாண்டில் இதற்கு ரூ.3 கோடி. ரூ.90 கோடி செலவில் 5 புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். இதற்காக இந்த அறிக்கையில் ரூ.7.5 கோடி ஒதுக்கீடு. 5 ஆண்டுகளில் 24,000 மாணவர்கள் ஆண்டுக்கு 10 என, 5 ஆண்டுகளில் 50 அய்டிஅய்க்களில் என தொடங்கப்படும் ஏஅய் மற்றும் மெசின் லேர்னிங் தொடர்பான புதிய படிப்பால் பயனடைவார்கள்.

நம்மை புதிய உலகத்துக்கு தவெக ஆட்சியாளர்கள் அழைத்துச் செல்கிறார்கள் என்றே ஒரு பரவச உணர்வு மேலிடுகிறது. அய்ந்து ஆண்டுகளில் 24,000 மாணவர்கள் என்றால், ஆண்டில் 5,000 பேருக்கும் குறைவானவர்கள் என்று கணக்கு வரும். இந்தக் கணக்கு சரிதான். தெரிந்த கணக்கு கூட தவெக ஆட்சியாளர்கள் சொல்லும் கணக்குகளில் குழம்பி விடுகிறது. 1.67 கோடி இளைஞர்கள் இருக்கும் ஒரு மாநிலத்தில் ஓராண்டில் 5,000 இளைஞர்கள் பற்றி சிந்திக்கும் இந்த சிந்தனை, அதுவும் அய்டிஅய் பயிற்சி தரும் சிந்தனை சிலிர்க்க வைக்கிறது.

இன்னொரு முத்து. ஒன்றிய, மாநில அரசுகள் நடத்தும் போட்டித் தேர்வுகள் எழுதும் இளைஞர்களுக்கு பயிற்சி தர இந்த நிதியாண்டில் ரூ.3.38 கோடி கூடுதல் நிதி.

எத்தனை பேர் அந்தத் தொகையில் பயன் பெறுவார்கள் என்று சொல்லப்படவில்லை. தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ள தேர்வுகளில் பணியிடங்கள் குறைக்கப்பட்டுள்ளன என்று தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்கள் சொல்கின்றனர்.

வெற்றித் திறன் பயிற்சித் திட்டம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றிய அரசு அறிவித்த வேலை வாய்ப்பு திட்டத்தின் கூறுகள் கொண்டதாக இருக்கிறது. தனியார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து 20,000 இளைஞர்களுக்கு பயிற்சி, பயிற்சிக் கால உதவித் தொகை ஆகியவற்றுக்கு ரூ.150 கோடி முதல் கட்டமாக ஒதுக்கப்படுகிறது. இளைஞர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.75,000. மாதக் கணக்கு போட்டுக் கொண்டால், இளைஞர் எதிர்காலம் வளமாக மாறிவிடும் வாய்ப்புகள் கண்ணில் தெரியும்.

கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள் கவர்ந்திட மாட்டாவோ என்று பாரதி கேட்டான். மாதம் ரூ.6250 கிடைத்தால்.... மாணவர்கள், இளைஞர்கள் என்ற எதிர்கால தமிழ்நாட்டை இப்படித்தான் வளர்த்து எடுக்கப் போகிறார்கள். பெண் தொழிலாளர் நலன் காக்க சிறப்புத் திட்டம் ஏதும் உள்ளதா? இல்லை. இப்படியாக தொழிலாளர் நலனுக்கும் திறன் மேம்பாட்டுக்கும் ரூ.2,022 கோடி ஒதுக்கிவிட்டார்கள்.

இன்னுமோர் அடிப்படையான பிரிவான விவசாய சமூகத்துக்கு பெருமாள் அருளுடன் தனி அறிக்கை உள்ளது. விபி கிராம் ஜி செயல்படுத்தப்பட்ட 2026 ஜூலை மாதத்தில் 2025 ஜூலை மாதம் இருந்ததை விட தமிழ் நாட்டில் மட்டும் 74% வேலை வாய்ப்புகள் குறைந்துவிட்டன. இப்போது ரூ.5,057 கோடி திட்டத்துக்கு ஒதுக்கப்படுகிறது. கருவாடு, ரசம் சோறு கூட யோசித்துதான் இனி அவர்கள் சாப்பிட வேண்டும். இது ஒன்றிய அரசு சுமத்தியுள்ள சுமை. 125 நாட்கள் வேலையை 'வெற்றி 150' என்ற பெயரில் 150 நாட்களாக்கி ரூ.100 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்த ரூ.100 கோடி ரூ.5,057 கோடிக்குள் வருகிறதா, அல்லது அதற்கும் கூடுதலாக வருகிறதா என்று அறிக்கையில் இருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை. தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தில் ரூ.3,461 கோடி இன்னும் தர வேண்டுமாம். கேட்டு வாங்கி மக்களுக்குச் சேர வேண்டியதை தந்துவிடுவார்கள் என்று நம்புவோம். பயிர்க்கடன் தள்ளுபடி, விவசாயக் கடன் தள்ளுபடி, குறுவை தொகுப்புத் திட்டம் என எதுவும் எங்கள் மீதான அக்கறையை காட்டவில்லை என்று சொல்லும் தமிழ்நாட்டு விவசாயிகள் போராடத் தயாராகிறார்கள்.

பெண்கள், குழந்தைகள், முதியோர் என்ற மற்ற பிரிவினர் மக்கள் நல்வாழ்வுத் துறையால் கவனித்துக் கொள்ளப்படுகிறார்கள். ஸ்ரீதேவி, பாரதிராஜா எல்லாம் போன பின்னும் ஆத்தா ஆடு வளர்த்துச்சு என்று சொல்லிக் கொண்டே இருக்கலாம். கிராமப்புற பெண்கள் இன்னும் எத்தனை நாட்கள் ஆடு மேய்க்க வேண்டும்? மற்ற செயலில் உள்ள திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்துள்ளார்கள்.

பழைய, புதிய, நடுவில் வந்த ஓய்வூதியத் திட்டங்கள் பற்றி ஒன்றிய அரசு நிதி ஒதுக்கிய பிறகு சொல்கிறோம் என்று சட்டமன்றத்தில் சொல்லிவிட்டார்கள். ஒன்றிய அரசு என்ன நிதி, எப்போது தரும்? போனால் போகட்டும் போடா என்று மக்கள் சொல்லிவிட முடியாது.

கசிவுகளைத் தடுத்து ரூ.1500 கோடி வந்து விட்டது என்று அறிக்கையில் சொல்லப்படும் போது, சட்டமன்றத்தில் ரூ.15,000 கோடி என சொல்லப்பட்டது. அறிக்கையில் எழுத்துப் பிழையா, சொன்னதில் சொற்பிழையா, அல்லது ஆயிரத்து அய்நூறு கோடி என்று சொல்லத் தெரியாத பிழையா என்று நமக்கு உண்மை தெரிந்தாக வேண்டும். என்ன வகை வருகை என்று முன்னாள் நிதியமைச்சர் கேட்டபோது, வந்து கொண்டே இருக்கிறது என்றார்கள். கூடுதல் வருவாய் ஈட்ட எடுக்கப்படும் முயற்சிகளில் ரூ.15,000 கோடி வரும் என்று அறிக்கை சொல்கிறது. இதுவும் அதுவும் ஒன்றா? என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன? எதையும் தெளிவாகச் சொல்ல மாட்டார்கள். எல்லாம் ஒரு குத்துமதிப்பாக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ்நாட்டு ஜென்சி எளிதாகப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புவோம்.

சொந்த வரிவருவாய் ரூ.2,839 கோடி அளவுக்கு குறையும் என்று சொல்லப்படும் வரியில் தொடங்கும் பத்தி, சொந்த வரிவருவாய் 9.78% வளர்ச்சி அடையும் என்ற வரியுடன் முடிகிறது. தேவனே, என்னுடைய அறியாமையை பொறுத்தருளும். தொழில் வளர வேண்டும் என்று இந்த ஆட்சியாளர்களுக்குத் தெரிந்திருக்கிறது. பல திட்டங்கள் சொல்லியிருக்கிறார்கள். பெரிய தொழில்கள், சிறுகுறு தொழில்கள் என எல்லாம் சேர்ந்து 20 லட்சத்துக்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் ஏற்கனவே இருப்பதாகவும், வேலைவாய்ப்பு தரும் இந்தத் தொழில்களை ஊக்குவிக்க பல முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். (கடந்த ஆட்சியில் தயாராக வைத்திருந்த), 14,790 வேலை வாய்ப்புகள் இந்த இரண்டு மாத கால ஆட்சியில் உருவாகிவிட்டதாகவும், பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு 1.5 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறிவிடும் என்றும் ஒரு கணக்கு போட்டார்களே, அங்குதான் விஜய்ணா நிற்கிறார்.

**தலையங்கம் தொடர்ச்சி...**

தமிழக மக்கள் நலனே முதன்மையானது என்ற விஜய் ஆட்சியில், சென்னை மாநகரப் பேருந்துகளில் தொழிலாளரை பணியமர்த்த, உத்தரப் பிரதேச தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் போடப்படுகிறது. அந்த நிறுவனம் தமிழர்களைத் தான் வேலைக்கமர்த்துமா? இது தற்காலிக நியமனம்தான் என்கிறார் அமைச்சர் ஒருவர். ஏதோ, அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொன்னது போல், 5 ஆண்டுகள் பணி செய்த தொழிலாளர்கள் அனைவரையும் பணி நிரந்தரம் செய்துவிட்டதுபோல. பணி நிரந்தம் கேட்டு டாஸ்மாக் தொழிலாளர்களும், தூய்மைப் பணியாளர்களும் நாள்தோறும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைச் சந்தித்துப் பேசக் கூட விஜய் அவர்களுக்கு விருப்பமில்லை. நாங்கள் மக்கள் பணி செய்யவே வந்துள்ளோம் என்றவர்கள் கார் வேண்டும் என்கிறார்கள். நூறு கோடி சம்பளத்தை விட்டுவிட்டு வந்தவர் அரசாங்கப் பணத்தில் அள்ளிக் கொடுக்கப் போகிறாராம். சத்தமில்லாமல் சர்க்கரை விலையை உயர்த்திவிட்டார்கள். அரிசி விலையும் உயர்கிறது. நூறு நாளில் என்ன மாற்றம் செய்துவிட முடியும் என்று அறநிலையத் துறை அமைச்சர் கேட்கிறார். அப்படியென்றால், மக்களுக்கு எதிரானவற்றை, அடக்குமுறையை மட்டும் உங்களால் எப்படிச் செய்ய முடிகிறது? அதனால்தான் கேட்கிறார்கள் இது மக்கள் நலன் காக்க வந்த அரசா என்று?

# விவசாயிகளை ஏமாற்றிவிட்ட தவெக அரசு

சந்திரமோகன்

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து'

என்ற திருக்குறள் வரிகளுடன் தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை துவங்குகிறது. அதாவது 'பிற தொழில்களைச் செய்யும் அனைவருக்கும் அடிப்படை ஆதாரமாக உழவர்கள் விளங்குகிறார்கள்' என்பது குறளின் சாரமாகும். ஆனால், இந்தப் பொருளில் விவசாய நிதிநிலை அறிக்கை இல்லை. "உழவர்கள், உழவர் சங்கப் பிரதிநிதிகள் முதலியோரை அழைத்துப் பேசி, அவர்கள் கருத்துகள், கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் வகையில் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது." என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படி எதுவும் காணப்படவில்லை. தவெகவின் நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றமே.

**விவசாயத்திற்கான குறைந்த நிதிஒதுக்கீடும், வழக்கமான சில மானியங்களும் திட்டங்களும்:—**

தமிழ்நாடு அரசின் 2026-2027ஆம் ஆண்டுக்கான விவசாய நிதிநிலை அறிக்கையில் விவசாயத் துறைக்கு ரூ.14,984 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு இலவச மின்சார மானியத்திற்கு ரூ.7,432 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சொசைட்டி பயிர் கடன்கள் தள்ளுபடிக்காக சுமார் ரூ. 6000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாய நிதிநிலை அறிக்கையில் விவசாயிகள் தொடர்ந்து கோரி வரும் நிவாரணங்களுக்கான அறிவிப்புகள் எதுவும் இல்லை. குறுவை சாகுபடி பொய்த்துவிட்டதால், வருமானம் இழந்து தவிக்கும் விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் எவ்வித நிவாரணங்களும் அறிக்கையில் இல்லை. கடந்த திமுக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட விவசாயத் திட்டங்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. ஒருசில புதிய திட்டங்களும், ஊழல்களுக்கு வழிவகுக்கும் மானியத் திட்டங்களுமே அறிக்கையில் உள்ளன.

விவசாயிகளுக்கான திட்டங்கள் என்கிற பெயரில் கார்ப்பரேட் நிறுவனங்களின் இயந்திரங்கள், உரங்கள், விதைகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை விற்பதற்கான நடைமுறை நீடிக்கிறது. விதைகள், உரங்கள் எனத் துவங்கி சூரிய மின்சக்தி மோட்டார்கள், தார்பாய்கள் வழங்குவது வரை அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களால் விவசாயிகளுக்கு எவ்வித பயனும் இல்லை; அவையெல்லாம் கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை நமது விவசாயிகளின் தலையில் கட்டுவதற்கானது. திட்டங்கள் எதுவும் தமிழ்நாடு விவசாயிகள் சந்திக்கும் நெருக்கடிகளுக்கான தீர்வாகத் தெரியவில்லை.

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜயும் தவெக கட்சியும் தமது தேர்தல் பரப்புரையில்,

1) கடன் தள்ளுபடி - 5 ஏக்கர் வரை நிலம் உள்ள சிறுகுறு விவசாயிகளின் சொசைட்டி பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வது, மற்ற விவசாயக் கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்வது

2)குறைந்தபட்ச ஆதார விலை நெல் குவிண்டாலுக்கு ரூ. 3500-, கரும்பு டன்னுக்கு ரூ. 4500- மற்றும் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ. 44 என வழங்குவது

3) புதிய வேளாண் மின் இணைப்புகள் 20 லட்சம் விவசாயிகளுக்கு வழங்குவது

4) அனைத்து விவசாயிகளுக்கும் "விவசாயிகள் உரிமை தொகை" ஹெக்டேருக்கு ரூ. 15,000 வழங்குவது என்று கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றி நிதிநிலை அறிக்கையில் எதுவும் சொல்லப்படவில்லை.

5 ஆண்டுகளில், 131 இலட்சம் மெட்ரிக் டன் என உணவு உற்பத்தியை அதிகப்படுத்துதல், உற்பத்தியை ஊக்குவித்தல், விவசாயிகள் வருமானம் மேம்பாட்டு ஆணையம் போன்றவை பற்றி எல்லாம் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், விவசாயிகளின் குரல்வளையை நெரிக்கும் கடன்களை தள்ளுபடி செய்தல், விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலைகளை உயர்த்துதல் மற்றும் வேளாண் நிலங்கள் கோருகிற ஏழை விவசாயிகளுக்கு அரசு புறம்போக்கு மற்றும் உச்சவரம்புக்கு மிகையான நிலங்கள் வழங்கி பாசனப் பரப்பளவை அதிகரிப்பது போன்ற முற்போக்கு நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியை உயர்த்த, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த அவசியமான திட்டங்கள், நிதி ஒதுக்கீடு எவையும் விவசாய நிதிநிலை அறிக்கையில் காணப்படவில்லை.

**ஆறுதலுக்காக ஒருசில அறிவிப்புகள் :—**

விவசாய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் கூடிய சட்டமன்ற கூட்டத் தொடரில், தவெக அரசு சில அறிவிப்புகளை வெளியிட்டது. ஒரு குவின்டால் சன்னரக நெல்லுக்கு ரூ.289ம், ஒரு டன் கரும்புக்கு ரூ.709.50ம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்றும் சன்னரக நெல்லுக்கு குவின்டாலுக்கு ரூ. 2750ம், பொது ரகத்திற்கு ரூ.2600 ம் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது. ஆனால், தவெகவின் தேர்தல் வாக்குறுதியான, 'நெல்லுக்கு குவின்டாலுக்கு ரூ.3500 வழங்கப்படும்' என்பது எப்போது எனத் தெரியவில்லை.

ஒரு டன் கரும்புக்கு ஒன்றிய அரசு ரூ.5500 விலை வழங்க வேண்டும் என்று நாடு முழுவதும் இருக்கிற கரும்பு விவசாயிகள் கோரிக்கை வைத்து

போராடி வருகிற நிலையில், தவெகவின் தேர்தல் வாக்குறுதியான, 'கரும்புக்கு டன்னுக்கு ரூ. 4500- வழங்கப்படும்' என்பது எதிர்பார்க்கப்பட்ட நிலையில், '2025-26 பருவத்தில் அரவை செய்த கரும்புக்கு டன்னுக்கு ரூ.4000/ விலை வழங்கப்படும்' என மட்டும் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சொசைட்டிகளில், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாடு அரசும், ஆவினும் 4½ ஆண்டுகளுக்குமுன் பால் கொள்முதல் விலையில் ரூ.3 உயர்த்தியது. ஆனால், அதன்பின் தீவனத்திற்கான செலவு 100% உயர்ந்துவிட்டது. தற்போது 4.3 கொழுப்பு சத்தும், 8.2 இதர சத்தும் உள்ள பாலுக்கு ஆவின் ரூ.35 கொள்முதல் விலை நிர்ணயம் செய்து, அதில் ரூ.1.25 மார்ஜின் தொகை என பிடித்தம் செய்து, ரூ33.75தான் ஆவின் தருகிறது. ஆனால், இதே தரமுள்ள பாலுக்கு தனியார் பால் நிறுவனங்கள் ரூ.10 உயர்த்தி ரூ.45ஆக தருகிறார்கள்.

எனவே தான், பால் உற்பத்தி செய்யும் இலட்சக்கணக்கான சிறு, குறு விவசாயிகள், " லிட்டருக்கு ரூ.10 உயர்த்தி ரூ.45 பசும்பாலுக்கும், ரூ.60 எருமை பாலுக்கும் தரவேண்டும். தீவனம் 50% மான்ய விலையில் தட்டுப்பாடின்றி வழங்கப்பட வேண்டும்" உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஆவின் சொசைட்டிகள் முன் கறவை மாடுகளுடன் போராட்டம் நடத்தினர்.

**சொசைட்டி பயிர்க் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்தல்:—**

விவசாய விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்காததால், தமிழ்நாட்டிலுள்ள இலட்சக்கணக்கான விவசாயிகள் பெரும் கடன் நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர். எனவே தான், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் காலத்தில் தவெக கட்சி அறிவித்த வாக்குறுதியான, "5 ஏக்கர் வரை நிலமுள்ள சிறுகுறு விவசாயிகளின் சொசைட்டி பயிர்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வது, மற்ற விவசாயிகளின் கடன்களில் 50 சதவீதம் தள்ளுபடி செய்வது" என்பதை எதிர்பார்த்து தவெகவிற்கு வாக்களித்தனர். ஆனால், அரியணை ஏறிய தவெக அரசு, சொசைட்டியில் விவசாயிகள் வாங்கிய வேளாண் கடன் தள்ளுபடியைப் பொறுத்தவரை, ரூ.50,000 துவங்கி ரூ.75,000 வரை தள்ளுபடி என இரண்டு முறை வெவ்வேறான அறிவிப்புகள் வெளியிட்டுள்ளது. அதுவும்கூட தமிழ்நாட்டிலுள்ள விவசாய சங்கங்களின் போராட்டங்கள் காரணமாகவே நிகழ்ந்துள்ளது.

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அதிருப்தி உற்ற பல்வேறு விவசாய சங்கங்களுடன் தவெக அரசு பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர், 17.8.2026 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ரூ. 5932 கோடி தள்ளுபடியுடன் ரூ. 953 கோடி கூடுதல் தள்ளுபடி செய்யப்பட்டதாக, விதி 110-ன் கீழ், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

புதிய அறிவிப்பின்படி, கூட்டுறவு வேளாண் சொசைட்டிகளில், ரூபாய் 75,000 வரை கடன் பெற்றவர்களுக்கு 100% கடன் தள்ளுபடி,

ரூ. 75,000 முதல் 1 இலட்சம் வரை உள்ளவர்களுக்கு அதிகபட்சமாக ரூ. 75,000 கடன் தள்ளுபடி, ( கடந்த முறை அறிவிப்பில் ஒப்பிட்டால், இந்தப் பிரிவினர் மட்டும் தலா ரூ.40,000- கூடுதல் தள்ளுபடி பெறுவர்)

ரூ. 1 இலட்சத்திற்கு மேல் கடன் உள்ளவர்களுக்கு அதிகபட்சமாக ரூ.35,000 தள்ளுபடி என, ஆக மொத்தம், 13.34 இலட்சம் விவசாயிகளுக்கு மொத்த தள்ளுபடி ரூ.6220 கோடி மட்டுமே ஆகும்.

மாறி மாறி அறிவிப்புகள் மூன்றாவது முறையாக வந்தபோதிலும், 5 ஏக்கருக்கு கீழ் நிலம் உள்ள சிறு குறு விவசாயிகளுக்கு மொத்த கடன் தள்ளுபடி என்ற தவெக தேர்தல் கால வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

மாறாக, நிகழாண்டு 2026 -2027 நிதியாண்டில் புதிய வேளாண் கடன்களுக்கு ரூபாய் 17,000 கோடி நிதி ஒதுக்கி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பழைய கடன்களை கட்டுவதற்கு வழியில்லாமல் கடனாளிகளாக உள்ள விவசாயிகளுக்கு, இப் புதிய கடன்களால் பயன் எதுவும் இல்லை.


மகாராஷ்டிரா மாநில வேளாண் கடன் தள்ளுபடி திட்டத்தில், அம்மாநிலத்தில் கடன் பெற்ற 56 லட்சம் விவசாயிகளுக்கு, ரூ.36,585 கோடி ரூபாய் தள்ளுபடித் திட்டத்தை சென்ற மாதம் அறிவித்து தற்பொழுது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தெலுங்கானாவில் 40லட்சம் விவசாயிகளுக்கு ஒவ்வொரு விவசாயிக்கும் ரூபாய் 2 லட்சம் வரை கடன் தள்ளுபடித் திட்டத்தின் மூலம் ரூபாய் 31 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்து அம்மாநில விவசாயிகளை கடன் பாதிப்பிலிருந்து விடுவித்துள்ளது. அந்த நடைமுறையைக் கூட தமிழ்நாடு அரசு பின்பற்றலாம்.

தவெக தேர்தல் அறிக்கையில் விவசாயிகளுக்கு உறுதியளித்தபடி அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்து நடப்பு சட்டமன்ற தொடரில் அறிவிப்பு செய்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

மேலும் கூடுதலாக, குத்தகை விவசாயிகள் மற்றும் நிலமிழந்த, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசு புறம்போக்கு, ஆக்கிரமிப்பில் உள்ள பஞ்சமி நிலங்கள் மற்றும் மடங்கள், சமய நிறுவனங்களின் விவசாய நிலங்கள், எஸ்டேட்டுகள், பண்ணைகளின் உச்சவரம்புக்கு மிஞ்சிய பினாமி நிலங்கள் ஆகியவற்றை எல்லாம் அரசு கையகப்படுத்தி, விநியோகம் செய்வதற்கான முற்போக்கு கொள்கைகள், திட்டங்களுடன் திருத்தப்பட்ட விவசாய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் தவெக அரசிடம் எதிர்பார்க்கிறார்கள்.

# நினைவுகளின் தேரோட்டம்!!!




## பேரா. சிவகுமார் பற்றி பேரா. திருமாவளவன்

மாநிலக் கல்லூரி முதல்வர் அறை. சிண்டிகேட் உறுப்பினரான பேரா. சிவகுமாரை ஜேப்பியார் சந்திக்கிறார்...தம் கல்லூரிக்கு ஆதரவாக சிண்டிகேட் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்துகிறார். " விதிகளின்படி அதை நான் ஏற்க இயலாது" நேருக்கு நேர் கூறியவர் பேராசிரியர்.

சென்னை பல்கலைக் கழகத்தில், முனைவர் பட்ட பதிவுக்காக இந்திய தேசியப் படையின் தலைமைத் தளபதி திரு சுந்தர்ஜி வருகிறார். பல்கலை நிர்வாகம் அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு வழங்குகிறது. " செய்யாறு, திண்டிவனம் கல்லூரிகளில் இருந்து வருகிற எங்கள் ஆசிரியர்களுக்கும் இதுபோன்ற சிவப்புக் கம்பள வரவேற்பு உண்டா?" என்று கேள்வி எழுப்பினார் பேரா. சிவகுமார். சிண்டிகேட் வாயடைத்து நின்றது.

சென்னை கிறித்துவக் கல்லூரி நிர்வாகம் பிருந்தாவன் மோசஸ், ஆலிவர் ஜான் ஆகியோரை பணியிடை நீக்கம் செய்கிறது. அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா முன்னிலையில் பேச்சுவார்த்தை நடக்கிறது. பணிநீக்கம் திரும்பப் பெறப்படும் என முடிவாகிறது. இக்கட்டத்தில், பேரா. சிவகுமார் தலையிட்டு "உடனடியாக திரும்பப்பெற ஆணையிடுங்கள்" என்று கூற ஒரு புன்னகையுடன் அவர் கோரிக்கையை முதலமைச்சர் ஏற்கிறார்.

ஆசிரியர் இயக்கப் போக்கினூடே அரசியல் திசைவழியில் திராவிட மற்றும் பிற முதலாளித்துவக் கட்சிகளிடம் மாறுபட்டு இடதுசாரி ஈர்ப்பில் இ.க.க. (மா.லெ) விடுதலைக் கட்சியில் இணைந்து பாவலர் இன்குலாப், தெசீசு மணி, பீர்க்கன், பாலகிருஷ்ணன், ஆகியோருடன் நானும் சிவகுமார் உம் செயல்பட்டது எங்களை இயக்கிய உந்துசக்தி! தோழர்கள் வினோத் மிஸ்ரா, திபங்கர் பட்டாச்சார்யா, நாகபூஷன் பட்நாயக், சேஷாத்திரி அண்ணாதுரை, பாலசுந்தரம், சங்கர், போன்ற எண்ணற்ற தோழர்களுடன் சமூக மாற்றச் செயற்களத்தில் நாங்கள் உரமுற்றோம்!

இந்திய மக்கள் முன்னணி சார்பில் 1980களில் நடந்த தமிழக மக்கள் முன்னணி சென்னை, மதுரை பேரணிகள், சென்னையில் நடந்த AICCTU – முதல் மாநாட்டு சிறப்புகள் ஆகியன எங்கள் சிந்தையில் பதிந்த சுவடுகள்! இகக(மாலெ) விடுதலை கழுக்கக் (தலைமறைவு) கட்சியாக இருந்த காலத்தில் பல்வேறு கட்சிக் கூட்டங்களில் நாங்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டோம்! சங்கத் தேர்தலில் சிவகுமார் பெற்ற வெற்றி அன்றைய தீப்பொறி இதழில் செய்தியானது.

ஆசிரியர் இயக்கப் போராட்டங்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் தமிழக அளவில் CPI, CPM, CPIML கட்சி சார்பு ஆசிரியர் அணி முன்கை எடுத்து திசைவழி காட்டியது ஒரு வரலாற்றுப் பதிவு!

பேரா.சிவகுமார் TNGCTA – வின் தலைமைப் பொறுப்பேற்ற காலத்தில் மாநிலச் செயற்குழுவில் தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றியதும் அரங்கம் அதிர புரட்சிகரப் பாடல்கள் ஒலிக்கப்பட்டதும் அவருடைய சிந்தனை அருவிச் சிதறல்கள். 1980களில் ஈழப் போராட்டக் குழுவினருக்கு சேலம் மாநாட்டில் சங்கத்தின் சார்பில் நிதியுதவி வழங்கியதும், தமிழீழப் போர் ஆதரித்து தனிச் சுற்றறிக்கை விடுத்ததும் பேரா. சிவகுமார் பதித்த சிறப்பு முத்திரை.

இத்தகைய செயல்பாடுகளில் அவருக்குத் துணை நின்ற பேராசிரியர்கள் கேசவன், மார்க்சு, சீனிவாசன், கல்விமணி, கோச்சடை, ஜெயச்சந்திரன், வில்லியம் போன்ற பலர் குறிப்பிடத் தக்கவர்கள்! ...

தெனாலியில் நிகழ்ந்த AIFUCTO மாநாட்டில் பேரா. சிவகுமார் கலந்துகொள்ள இயலாத நிலையிலும் தேர்தலில் அவர் பெயர் முன்மொழியப்பட்டு போட்டியில் கணிசமான வாக்குகளைப் பெற்றமை கூட்டமைப்பில் ஒரு புதிய நகர்வை ஏற்படுத்திய நிகழ்வு! முன்னாள் அமைச்சர்கள் அரங்க நாயகம், பொன்னையன், இராம. வீரப்பன், பொன்னுசாமி, பொன்முடி ஆகியோரை இயக்கப் போராட்டங்களில் எதிர்கொண்டது ஒரு நெடிய வரலாறு.

கல்லூரி நாட்களில் தி.மா.மு.க.வில் சேர்ந்து துரைமுருகன், வை.கோ, இராசா முகமது போன்ற பலருடன் தோழமை கொண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரில் தலைநகரில் களம் கண்ட மாணவர் சிவகுமாரின் பரிணாம வளர்ச்சி ஆசிரியர் இயக்கப் போராட்டங்களில் பொங்கி எழுந்தது. அத்தகைய காலகட்டத்தில் 1979–ஆம் ஆண்டு மாநிலக் கல்லூரியில் பணியில் சேர்ந்தேன். அன்று முதல் கடந்த 47 ஆண்டுகாலமாக அவருடன் என் நீண்ட பயணம் தொடர்கிறது.

**பேரா. சிவகுமார் அகவை 80 மலருக்காக, டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி மேனாள் முதல்வர் (பொறுப்பு), பேரா.திருமாவளவன் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள். இந்த கட்டுரையை தோழர் திருமாவளவன் இறப்பதற்கு ஒரு நாள் முன்பு எழுதி அளித்துள்ளார். சென்னைக்கு வருவதற்கு முன்பு ராஜமன்னார்குடி (திருவாரூர் மாவட்டம்) அரசு கலைக்கல்லூரியில் ஆங்கிலத் துறை துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அப்போது முதலே, நெருக்கடியான காலகட்டத்தில் கூட, கட்சி வேலைகளை அர்ப்பணிப்போடு முன்னெடுத்துச் சென்றவர், மாணவர்களோடு மாணவராக பழகிய பேரா.திருமாவளவன்.**

# இருட்டைக் கிழிக்கும் ஒளிக்கீற்று!




நான் பேரா.சிவகுமாரின் மாணவன். எனது வகுப்பறை பேராசிரியர்கள் கோ. கேசவன், அண்ணாதுரை, ராதாகிருஷ்ணன் (மருதமுத்து). வகுப்பறைக்கு வெளியே எனது பேராசிரியர்கள் மக்கள் கவிஞர் இன்குலாப், திருமாவளவன், சிவகுமார். மாநிலக் கல்லூரி உணவு விடுதியில் தேநீர், காபியுடன் அரசியல் பேசுவோம். தோழர் சிவகுமார் அகவை எண்பது மலரில் முதல் கட்டுரையை எழுதியுள்ளவர் தோழர் திருமா. அவர் எங்கள் தோள்மீது கைபோட்டபடியே பேசுவார். பேராசிரியர்கள் இளவரசு, ஈரோடு தமிழன்பன், அக்கினி புத்திரன், சரசுவதி, அ.மார்க்ஸ் உள்ளிட்ட பேராசிரியர்களையும் குறிப்பிட வேண்டும். எண்பதை தொட்டுவிட்ட சிவகுமார், இன்றும் பேராசிரியராக இருக்கிறார். நான் அவரது மாணவனாகவே இருக்கிறேன்.

மாணவரையும் ஆசிரியரையும் கொண்டதே கல்வி. நமது குருகுலக் கல்வி மரபு காரணமாக ஆசிரியர்-மாணவர் எதிர் எதிராக இருமை கட்டமைக்கப்பட்டுவிட்டது. இந்த இருமையை, முதலாவதாக உடைத்தது 80 கள், 90கள். நாங்கள், மாணவர்கள் போராட்டங்களில் தெருக்களை நிரப்பினோம். ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக போராட்டத்தில் குதித்தனர். அப்போது ஆசிரியர்கள் போராட்டம் பெரும் வெற்றி பெற்றதற்கு மாணவர்களின் ஆதரவு ஒரு முக்கியமான காரணம். ஆசிரியர்கள் மாணவர்கள் போராட்டங்களில் கரம் கோர்த்தனர். மாணவர்-ஆசிரியர் உறவு ஜனநாயகப் படுத்தப்பட்டது. ஆசிரியர் போராட்டங்களில் புரட்சிகர சிந்தனை கொண்ட சிவகுமார் போன்றவர்கள் தலைமை ஏற்றனர். மாணவர் போராட்டங்களில் அதே அரசியல் சிந்தனை கொண்டவர்கள் முன்னணியில் இருந்தனர். 2026ல், 80கள், 90களின் நினைவுகள் அலைமோதுகின்றன. அன்று தொடங்கிய, ஜனநாயக ஒளிவீச்சு இன்று இன்னும் பிரகாசமடைந்துள்ளது.

ஜந்தர் மந்தர் போராட்டத்தில் எழுச்சி பெற்றுள்ளது. மாணவர்கள்-இளைஞர்கள் போராடுகிறார்கள் பேராசிரியர்கள் படைப்பாளிகள், பொதுமக்கள் கரம் கோர்க்கிறார்கள். மோடி ஆட்சியை அடிபணிய வைத்திருக்கிறார்கள். சமூகநீதி, ஜனநாயகம், அரசமைப்புச் சட்டத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களை மண்டியிட வைத்திருக்கிறது மாணவர்-இளைஞர் போராட்டம். எண்பது தொண்ணூறுகளின் ஒளிக்கீற்றுகள், இப்போதுள்ள சுற்றி வளைக்கும் இருட்டைக் கிழிக்கிறது...!

(08.08.2026 அன்று சென்னையில் நடைபெற்ற பேரா. சிவகுமார் அகவை 80 நிகழ்வில் இகக(மாலெ) மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் கலந்து கொண்டு பேசியதன் சுருக்கம்.)

# நீட் தேர்வினை ரத்து செய், கல்வியை மீண்டும் மாநில பட்டியலுக்கு கொண்டு வா.




சென்னையில் நீட் எதிர்ப்பு கூட்டியக்கம் சார்பாக, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மாணவர் முன்னேற்றத்தை ஒழித்துக் கட்டும் நீட் தேர்வை ஒழிக்க வேண்டும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டுவர வேண்டும் எனக் கோரி காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த புளியந்தோப்பு மோகன் உள்ளிட்ட தோழர்களை 10.8.2026 அன்று அகில இந்திய மாணவர் கழகம்(AISA) மாநிலத் தலைவர் தோழர் ராகுல், புரட்சிகர இளைஞர் கழகம் (RYA) மாநிலத் தலைவர் தோழர் சுந்தர்ராஜ், AICCTU மாநிலச் செயலாளர் தோழர் அதியமான், AISA தோழர் உயிரோவியன் ஆகியோர் சந்தித்து போராட்டத்திற்கு ஒருமைப்பாட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். மேலும், ஆகஸ்டு 20 அன்று AISA, RYA, DAA சார்பாக நடக்கும், AISA தேசியத் தலைவர் தோழர் நேகா கலந்து கொள்ளும் கருத்தரங்கத்தில், நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் சார்பாக கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார்கள். CPIML மாநிலக்குழு உறுப்பினரும் AICCTU மாநிலத் தலைவருமான தோழர் கு.பாரதி 12.8.2026 அன்று பட்டினிப் போராட்டத்தின் நிறைவு நாளில் தலைவர்களுடன் கலந்து கொண்டு பழரசம் கொடுத்து முடித்துவைத்தார்.

# திரிசங்கு சொர்க்கத்தில் விபி கிராம் ஜி வேலை வாய்ப்புத் திட்டம்!?

**(ஆகஸ்ட் 19 அன்று ஊரக வளர்ச்சி மானிய கோரிக்கை மீது பேசிய முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி, "எங்களது ஆட்சியில் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ 13,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 50 நாட்கள் மட்டுமே வேலை வழங்க முடிந்தது. இப்போது 12643 கோடி (ஒன்றிய ஆட்சி 7,586+ மாநில அரசு ரூ 5057 கோடி) மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு எப்படி 125 நாள் வேலை வழங்குவீர்கள்? நீங்கள் கூடுதலாக 25 நாட்கள் தருவோம் என்று சொல்கிறீர்கள். எப்படி கொடுக்க முடியும்" என்று கேட்டார்.**

**அதற்கு பதிலளித்த அமைச்சர் புஸ்ஸி ஆனந்த், "125 நாள் வேலை செய்த அனைவருக்கும் மேலும் 25 நாள் தர முதலமைச்சர் முடிவெடுத்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது" என்று சொன்னார். இதுவரை 50 நாள் வேலை மட்டுமே தரப்பட்டது என்றால், மோடியின் 125 நாள் எப்படி? விஜயின் கூடுதலாக 25 நாள் எப்படி? வாசகர்கள் பின்வரும் செய்திக் கட்டுரையை படித்துப் பார்த்து முடிவுக்கு வரவேண்டும். மட்டுமின்றி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஆனந்தும் எதிர்கட்சி வரிசையில் உள்ள திமுக மேனாள் அமைச்சரும் படிப்பது நல்லது. )**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் ஒன்றிய அரசு, முறையற்ற தலையீடுகளை மேற்கொண்டது, இதனால், கிராமப்புரத் தொழிலாளர்கள் பெரும் விலை கொடுத்து வருகின்றனர். மகாதேஊவே வன் கீழும், மாற்றாகக் கொண்டுவரப்பட்ட 'விக்சித் பாரத் - வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத இயக்கம் (கிராமின்)' [விபி கிராம் ஜி] திட்டத்தின் கீழும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இதுவரை இல்லாதவாறு கடும் சரிவைச் சந்தித்துள்ளது..

புள்ளிவிவரங்கள்படி, கடந்த ஆண்டு ஜூலை மாத மகாதேஊவேஉ திட்ட வேலைவாய்ப்புடன் ஒப்பிடும்போது, 2026 ஜூலையில் விபி கிராம் ஜி திட்டத்தில் வேலைவாய்ப்பு 50% சரிந்துள்ளது.

2026 ஜூலைக்கான 7.7 கோடி மனித-நாள்கள் என்ற ஆரம்பக்கட்ட உத்தேசக் கணக்கின் அடிப்படையில் இந்த 50% சரிவு கணக்கிடப்பட்டது. சமீபத்திய தரவுகளின்படி இது 8.3 கோடியாக உள்ளது; ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்படி இறுதி எண்ணிக்கை சுமார் 9 கோடியாக இருக்கலாம். ஜூலை மாதத்திற்கான இந்த உத்தேச அளவை நாம் ஏற்றுக்கொண்டாலும் கூட, ஜூலை 2025-ஐ விட இது 40%-க்கும் அதிகமான பெரும் பின்னடைவாகும்.

### திசைதிருப்பும் சாக்குப்போக்கு

2026 ஜூலை மாதத்தில், ஒருசில மாநிலங்கள் விபி கிராம் ஜி சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் திட்டத்தை அமலாக்கம் செய்யாமல் நிறுத்தி வைத்திருந்ததே இந்த பின்னடைவுக்குக் காரணம் என ஊரக வளர்ச்சி அமைச்சகம் பலவீனமான ஒரு வாதத்தை முன்வைக்கிறது. இது அப்பட்டமான திசைதிருப்பல். முதலாவதாக, மொத்த வேலைவாய்ப்பில் இந்த மாநிலங்களின் பங்கு மிகக் குறைவு; மேலும், இந்த மாநிலங்களைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தாலும் சரிவின் விகிதம் அதே அளவில்தான் உள்ளது. இரண்டாவதாக, இந்த ஜூலை மாதச் சரிவு என்பது முன்னரே தொடங்கிவிட்ட ஒரு நெருக்கடியின் தொடர்ச்சியே தவிரப் புதியது அல்ல.

சில பின்னணி விவரங்கள் இதைத் தெளிவாகப் புரியவைக்கும்: மகாஊவேஉதி திட்டத்திற்கு மாற்றாக விபி கிராம் ஜி கொண்டுவருவதற்கான மசோதா 2025-டிசம்பரில் நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது. 2026 ஏப்ரல் 1 முதல் இந்த மாற்றம் நடைமுறைக்கு வரும் என ஊரக வளர்ச்சி அமைச்சர் அறிவித்தார். ஆனால் ஏப்ரல் 1 அன்று நடைமுறைக்கு வரவில்லை. திட்டத்திற்கான விதிகள் கூட இன்னும் வகுக்கப்படவில்லை. இதனால் மகாஊவேஉதி தொடர்ந்து நீடித்தது.

மே 22, 2026 அன்று, அமைச்சகம் விபி கிராம் ஜி திட்டத்திற்கான வரைவு விதிகளைப் பொதுமக்களின் கருத்துக்காக வெளியிட்டது. இந்த விதிகள் பெருமளவில் மகாதேஊவேஉதிட்ட விதிகளின் மறுவடிவமே ஆகும். இறுதி விதிகள் ஜூன் மாத இறுதியில் வெளியாகின; சரியாக ஜூலை 1 அன்று மகாஊவேஉதிட்டத்தை விபி கிராம் ஜி ஆக அதிகாரப்பூர்வமாக மாற்றுவதற்குச் சற்று முன்னதாக இந்த விதிகள் வெளியிடப்பட்டன. ஜூன் 30 அன்று நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ₹300 என்ற அளவில் விபி கிராம் ஜி ஊதிய விகிதங்களும் அறிவிக்கப்பட்டன—இது 2009-10 விலைகளின்படி முந்தைய மகாஊவேஉதி-ன் ₹100 என்ற அளவுக்கு இணையானது.

### மாறுதல் காலமும் கள யதார்த்தமும்

இந்த நிதியாண்டின் முதல் மூன்று மாதங்களில் (ஏப்ரல் முதல் ஜூன் வரை) குழப்பமே நீடித்தது. கிராம்சியின் கூற்றை மேற்கோள் காட்டுவதானால், 'பழைய மகாதேஊவேதி உலகம் மறைந்து கொண்டிருந்தது; புதிய விபி கிராம் ஜி உலகம் பிறக்கப் இன்னும்போராடிக் கொண்டிருந்தது.' சில மாவட்டங்களில், மகாதேவேஉ திட்ட அதிகாரிகள் புதிய பணிகளைத் தொடங்க மறுத்துவிட்டனர். பல பகுதிகளில் மகாதேவேஉ வேலைகளே அறவே நடக்கவில்லை. கோடைக் காலங்களில் (விவசாயப் பணிகள் மந்தமாக இருக்கும் போது) மகாதேவேஉதி பொதுவாக உச்சத்தில் இருக்கும் என்பதால், இது ஒரு தீவிரமான பின்னடைவாகும். ஜூலை 2026-ல் விபி கிராம் ஜி தட்டுத்தடுமாறித் தொடங்கியது. இந்த நிச்சயமற்ற நிலை தொடர்கிறது.

*2024-25 மற்றும் 2025-26 நிதியாண்டுகளின் முதல் நான்கு மாதங்களில் (ஏப்ரல் முதல் ஜூலை வரை) முறையே 128 கோடி, 119 கோடி மனித-நாள்கள் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு, ஆண்டின் மொத்த வேலைவாய்ப்பில் கிட்டத்தட்ட 50% பூர்த்தி செய்யப்பட்டது. ஆனால் 2026-27-ல், MGNREGA மற்றும் VB-G RAM G இரண்டும் சேர்ந்து அதே மாதங்களில் வெறும் 70 கோடி மனித-நாள்கள் வேலைவாய்ப்பை மட்டுமே உருவாக்கியுள்ளன— இது முந்தைய இரண்டு ஆண்டுகளின் சராசரியை விட 43% சரிவாகும்.*

*அனைத்து முக்கிய மாநிலங்களிலும் வேலைவாய்ப்பு சரிந்தாலும், அந்தச் சரிவு மாநிலங்களுக்கிடையே சீராக இல்லை. ஆந்திரப் பிரதேசம் (-1.9%), அசாம் (-7.7%), தெலங்கானா (-9.2%), தமிழ்நாடு (-17%) போன்ற ஒரு சில மாநிலங்களில் சரிவு குறைவாக இருந்தது. ஆனால் 19 முக்கிய மாநிலங்களில் 10 மாநிலங்களில் இந்தச் சரிவு 60% முதல் 85% வரை இருந்தது. ஏப்ரல்-ஜூலை 2026-ல் வேலைவாய்ப்பு உருவாக்கம் கிட்டத்தட்ட முடங்கிப்போன மாநிலங்களில் மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஜார்க்கண்ட் போன்ற இந்தியாவின் மிகப்பெரிய, ஏழ்மையான மாநிலங்களும் அடங்கும்.*

*VB-G RAM G-க்கு மாறுவது வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் பெரும் உயர்வை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டதால், இந்தச் சரிவு மேலும் அதிர்ச்சியளிக்கிறது. 2026-27 யூனியன் பட்ஜெட்டில் விபி கிராம் ஜி திட்டத்திற்கான ஒதுக்கீடு ₹95,692 கோடியாகும். மாநிலங்களின் பங்களிப்பையும் (பெரும்பாலான மாநிலங்களுக்கு 40%) சேர்த்து, மொத்த பட்ஜெட் ₹1.5 லட்சம் கோடியாக அல்லது 2025-26 MGNREGA செலவினத்தை விட சுமார் 70% அதிகமாக உயர வாய்ப்பிருந்தது. ஊதியத்தில் பெரிய மாற்றங்கள் இல்லாத நிலையில், இந்த கூடுதல் பட்ஜெட் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மாறாக, 2026-27-ன் முதல் நான்கு மாதங்கள் வரலாறு காணாத வீழ்ச்சியைக் கண்டுள்ளன.*

**நிச்சயமற்ற எதிர்காலம்**

*விபி கிராம் ஜி திட்டத்தைப் பற்றி இப்போதே முழுமையான தீர்ப்பை வழங்குவது முன்கூட்டிய முடிவாக அமையலாம். இருப்பினும், அதன் தொடக்கம் கண்டிப்பாக தோல்வியே ஆகும். இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் ஏழ்மையான மாநிலங்களில் பல மாதங்களாக வேலைவாய்ப்பு உருவாக்கம் முற்றிலும் முடங்கியுள்ளது என்பது மிகவும் கவலைக்குரிய விஷயம்.*

*அடுத்த சில மாதங்களில் நிலைமை மேம்படக்கூடும்; ஆனால் 2026-27-ல் திட்டமிடப்பட்ட ₹1.5 லட்சம் கோடி செலவினம் எவ்வாறு சாத்தியமாகும் என்பதைப் பார்ப்பது கடினமாக உள்ளது. பணியிடத்தில் முக அங்கீகாரக் கட்டாயம் மற்றும் மத்திய-மாநில அரசுகளின் நிதிப் பகிர்வு காரணமாக ஊதியப் பட்டுவாடாவில் கடுமையான சிக்கல்கள் ஏற்படலாம். மொத்தத்தில், எதிர்கால நிலைமை மங்கலாகவே காட்சியளிக்கிறது.*

**(19.08.2026 தி இந்து ஆங்கில நாளேட்டில் ஜான் டிரேஸ், முகமது ஜமீர் எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கம் – மதி)**

# கந்து வட்டி: தற்கொலையா? கொலையா??

மதுரை தெற்கு தொகுதி, செல்லூர் கீழத்தோப்பு பகுதியைச் சேர்ந்த கூலித்தொழிலாளி ராஜாராம் மனைவி பிரேமா (39), கந்துவட்டிக் கொடுமையால் தற்கொலை செய்து கொண்டதாக ஏடுகளில் வந்த செய்திகளை அடுத்து, 24.07.2026 அன்று கட்சியின் உண்மையறியும் குழு பகுதிக்குச் சென்றது. சிபிஐ(எம்.எல்) மதுரை மாவட்டச் செயலாளர் க.மெய்யர், அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கழக மதுரை பொறுப்பாளர் வள்ளிமயில், அனைத்திந்திய விவசாய–கிராமப்புரத் தொழிலாளர் சங்கப் பொறுப்பாளர் ஈஸ்வரி, அகில இந்திய மாணவர் கழக மதுரை பொறுப்பாளர் தேவராஜ், மாலெ கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினர் பாலசுந்தரம் ஆகியோரைக் கொண்ட குழு பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தது. அண்டை அயலாரையும் சந்தித்து உரையாடியது.

பூ விற்பனை செய்துவந்த பிரேமா தனது மூத்த மகளது திருமணச் செலவிற்காக சிக்கந்தர்சாவடியைச் சேர்ந்த செல்வகலையரசி (35), திருப்பதி, பகவதி, அங்கம்மாள் ஆகியோரிடம் ரூ. 2 லட்சம் கடன் பெற்று, மாதம் ரூ. 20,000 தவறாது வட்டி செலுத்தி வந்துள்ளார். ஆனாலும் இன்னும் 3 லட்சம் கடனிருப்பதாகக் கூறி, கந்துவட்டிக் கும்பல் பிரேமாவை அச்சுறுத்தியுள்ளன. வட்டி கட்டாவிட்டால் மானபங்கம் செய்திடுவோம் என மிரட்டியதால் மனமுடைந்த பிரேமா, பூச்சி மருந்து அருந்தி தற்கொலைக்கு முயன்றிருக்கிறார். அவராக பூச்சி மருந்து சாப்பிட்டிருக்க மாட்டார் என்று பிரேமாவின் நாத்தனார் அழுத்துக் கூறுகிறார். மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி ஜூலை 20–ம் தேதி உயிரிழந்திருக்கிறார்.

பிரேமா வின் குடும்பம், கூலி வேலை செய்து பிழைத்து வருகிறது. 12–ஆம் வகுப்பு முடித்துள்ள இவரது மகள் சந்தியா நகைக் கடையில் வேலை செய்கிறார். அம்மாவின் ஈமச்சடங்கிற்காக மொட்டை போட்டிருக்கும் வெற்றிவேலும் மேற்கொண்டு படிக்க முடியாமல் கூலி வேலைக்குச் செல்கிறார். இக்குடும்பத்திற்கு வந்திருக்க வேண்டிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ 1000 இதுவரை கிடைக்கவில்லை என்பது அதிர்ச்சியாக இருக்கிறது.

குற்றவாளிகளில் திருப்பதி என்பவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார். முக்கிய குற்றவாளிகளான செல்வகலையரசி, பகவதி, அங்கம்மாள் ஆகியோரை காவல் துறை இன்னும் கைது செய்யவில்லை.

உயிரிழந்த பிரேமாவின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, மருத்துவ ஆவணங்களை இதுவரை குடும்பத்தினரிடம் ஒப்படைக்காமல் காவல் துறையும் மருத்துவமனை நிர்வாகமும் காலதாமதம் செய்து வருகின்றன.

செல்லூர் பகுதியின், மிக அடர்த்தியான ஒண்டுக் குடித்தன நெசவாளர்கள், அவர்களது குடும்பம் பலவிதமான நிரந்தரமற்ற கூலித் தொழிலாளராகவும், நடைபாதை வியாபாரிகளாகவும் மாறியுள்ளனர். பிரேமாவின் கணவர் முட்டை கோஸ் கழிவுகளை சேகரித்து விற்று பிழைப்பு நடத்தி வருகிறார். வறட்சியால் பல பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்த உசிலம்பட்டி சமூகத்தினர் இங்கு 40% வரை உள்ளனர்.

பிரேமாவை தற்கொலைக்கு தள்ளிய செல்வகலையரசி, பகவதி, அங்கம்மாள் உள்ளிட்ட கந்துவட்டிக் கும்பலை உடனடியாகக் கைது செய்ய வேண்டும். 'தமிழ்நாடு கந்துவட்டி தடைச் சட்டம், 2003'–ஐ எவ்விதப் பாரபட்சமுமின்றி அமல்படுத்த வேண்டும்.

செல்லூர் பகுதி தினக்கூலிகள், சிறு வியாபாரிகளுக்கு வட்டியில்லா வங்கிக் கடன், அல்லது நுண்கடன்களை அரசு உடனடியாக வழங்குவதற்கான சிறப்பு நடவடிக்கைகளை துவங்க வேண்டும்.

நலிவடைந்த கைத்தறி, சிறுகுறு தொழில்களை மீட்டெடுத்து பாதுகாக்க சிறப்புப் பொருளாதாரத் தொகுப்பை அரசு அறிவிக்க வேண்டும். செல்லூர் போலவே தூய்மைப் பணியாளர், கட்டுமான தொழிலாளர் உள்ளிட்ட நகர்ப்புர தொழிலாளரை குறிவைத்து கந்துவட்டி கும்பல் இயங்குகின்றன. இக்கும்பல்கள் அரசியல் ஆதரவுடன் இயங்குகின்றன. இக் கும்பல்களை ஒழித்துக் கட்டவேண்டியது புதிய அரசின் பணி. புதிய அரசு நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் கொண்டுவர வேண்டும்.

போதைப் பொருட்கள் விநியோகத்தை முறியடிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதுமுள்ள டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும்.

12–ஆம் வகுப்பு முடித்துள்ள பிரேமாவின் பிள்ளைகளான சந்தியா, வெற்றிவேல் ஆகியோரின் கல்விச் செலவை அரசே ஏற்க வேண்டும்; மேலும், அக்குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். இந்த கோரிக்கைகள் மீது அரசுக்கு அழுத்தம் தருவதோடு பொது விசாரணை நிகழ்ச்சி நடத்துவதென்றும் ஆலோசனை உள்ளது.

நாங்கள் தவெக வெற்றிக்கு விழுந்து விழுந்து வேலை செய்தோம். ஆனால் தொகுதியின் தவெக சட்டப்பேரவை உறுப்பினர், திமுக, அதிமுக கட்சியினர், அரசு அதிகாரிகள் எவரும் வந்து எங்களை பார்க்கவில்லை. "நீங்கள்தான் (எம் எல் கட்சி) முதலில் வந்து பார்த்திருக்கிறீர்கள்" என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் கூறினர்.

கடலூரிலும்...!

இந்தக் கொடூர நிகழ்வுக்கு அடுத்த சில நாட்களில் கந்துவட்டிக் கொடுமையால் பாதிக்கப்பட்டு, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் அருகே உள்ள குணவாசல் கிராமத்தைச் சேர்ந்த கீதாராணி தற்கொலை செய்து கொண்டுள்ளார். செய்தியறிந்து (மாலெ)கட்சி மாவட்டச் செயலாளர் சி.ராஜசங்கர், புலவேந்திரன், ஆறுமுகம், ராமமூர்த்தி ஆகிய தோழர்கள் கீதாராணி குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் தெரிவித்து வந்தனர். தனித்து வாழும் கீதா ராணி தனது மகள்களின் கல்விச் செலவிற்காக அதே ஊரைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் கடன் வாங்கியுள்ளார். தொடர்ந்து வட்டி, கடன் செலுத்தியும் மேலும் பல லட்சம் கடனிருப்பதாகச் சொல்லி கடுமையாக அச்சுறுத்தியுள்ளார் கடன் கொடுத்தவர். மனமுடைந்து கீதா ராணி தூக்கில் தொங்கி விட்டார்.

கந்துவட்டிக் கும்பல், நுண்கடன் நிறுவனங்களின் அடாவடிக்கு ஏழை பெண்களின் உயிரிழப்பு தொடர் நிகழ்வாகி வருகிறது. கந்துவட்டி சங்கிலியில் பெண்களை முகவர்களாக முன்வரச் செய்திருப்பது புதிய செய்தி!

**– தேவராஜ், ராஜசங்கர்**

## இனாம் நிலப் பிரச்சனை:
# மக்களாட்சியில் மன்னராட்சி காலத்திய நடைமுறைக்கு தவெக அரசு முடிவு கட்டிவிட்டதா?

**மு.இராமச்சந்திரன்**

**பாஜகவின் இரட்டை வேடம்:**

மன்னராட்சி காலத்தில் கோவில் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட இனாம் நிலங்கள், 1963 இனாம் ஒழிப்புச் சட்டப்படி விவசாயிகளுக்கே உரிமையாக்கப்பட்டிருந்தன. ஆனால், கரூர் மாவட்டத்தில் 15 கிராமங்களில் உள்ள, 4 கோயில்களின் 3084.95 ஏக்கர் நிலம் இனாம் சட்டத்துக்குப் புறம்பாக, கோவிலுக்குச் சொந்தமென்று சொல்லி பத்திரப் பதிவுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலங்களை, உழவடை செய்துவரும் விவசாயிகளின், குடியிருப்போரின் நில உரிமையை அங்கீகரித்து ஜூலை 9 ம் நாள் இந்து சமய அறநிலையத்துறை உத்தரவு பிறப்பித்தது. இந்த நடவடிக்கைக்கு எதிராக, தமிழ்நாடு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட இந்துத்வா அமைப்புகளின் தலைவர்கள் "ரூ.25,000 கோடி மதிப்பிலான திருக்கோவில் சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களுக்கு தாரைவார்ப்பதா?" என த.வெ.க அரசுக்குக் கண்டனம் தெரிவித்தனர்; மறுபுறம் இதே முகாமைச் சேர்ந்த, பாஜகவின் பிற்படுத்தப்பட்டோர் அணியின் தேசிய தலைவரும், முன்னாள் எம்.பி.யுமான எஸ். கே.கார்வேந்தனும், பாஜகவின் முன்னாள் தலைவரும், இந்நாள் வீ த லீடர்ஸ் அமைப்பின் தலைவருமான அண்ணாமலையும் அரசின் நடவடிக்கையை வரவேற்றிருக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட இனாம் நிலங்களின் பத்திரப் பதிவுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும், நிலத்திலிருந்து எங்களை வெளியேற்றக் கூடாது என்று வலியுறுத்தியே

கரூர் வெண்ணைமலைப் பகுதி மக்கள் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள். இந்தப் பகுதியில் 1200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 60 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்துவருகின்றனர்; சிலர் 100 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருவதாகச் சொல்கின்றனர். அதற்கான அரசு ஆவணங்களையும் காட்டுகிறார்கள்.

இந்த நிலங்கள் முருகன் கோவிலுக்குச் சொந்தமானது என திருத்தொண்டர் (இந்துத்வா தொண்டர்) சபை நிறுவனர் ராதாகிருஷ்ணன் வாதாடி வருகிறார். 2015ல், அதிமுக ஆட்சியின் போது இந்தப் பிரச்சனையைத் துவக்கினார். 2018இல் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்து, 2019இல் குடியிருப்போருக்கு விவசாயிகளுக்குப் பாதகமாக தீர்ப்பையும் பெற்றார். பாஜகவுடன் கூடிக்குலாவுவதில் மும்முரமாக இருந்த அன்றைய அதிமுக அரசு இந்தப் பிரச்சனையில் அலட்சியமாக நடந்துகொண்டது. அன்றிலிருந்து குடியிருப்போரை அகற்றுவதற்கான முயற்சிகளும், அதற்கு எதிரான போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. இதேபோல, தாந்தோணிமலைப் பகுதியிலும் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்ற புதிய சர்ச்சையையும் ராதாகிருஷ்ணன் உருவாக்கி இருக்கிறார்; அந்தப் பகுதியிலும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

**மக்கள் போராட்டங்களில் இடதுசாரிகளும், விசிகவும்**

ஏற்கனவே 2025, செப்டம்பரில் திமுக அரசு, இனாம் நிலங்கள் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக அரசாணை ஒன்றை வெளியிட்டது. அந்த அரசாணைக்கு ராதாகிருஷ்ணன் நீதிமன்றத் தடையாணை பெற்றார். பின்னர் அந்த அரசாணையையே திமுக அரசு திரும்பப் பெற்றுக்கொண்டது. கரூர் வெண்ணைமலைப் பகுதியில் மக்கள் போராட்டங்கள் நவம்பரில் தீவிரம் பெற்றன. 20.11.2025 அன்று மக்கள் குடியிருப்புக்கு சீல் வைத்து அப்பகுதி மக்களை அப்புறப்படுத்த இந்து சமய அறநிலையத்துறையும், காவல்துறையும் மூர்க்கத்தனமாக முயற்சித்தன. இதை எதிர்த்து சிபிஐ, சிபிஐஎம், சிபிஐஎம்எல், விசிக உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும், பகுதிவாழ் மக்களும் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் சிபிஐஎம்எல் மாவட்டச் செயலாளர் இரா.பொன்னுத்துரை, மாவட்ட நிலைக்குழு உறுப்பினர்கள் மு.இராமச்சந்திரன் எஸ்.லட்சுமி உள்ளிட்ட இடதுசாரி, விசிக தோழர்களும் கலந்து கொண்டதற்காக கைது செய்யப்பட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பா.ஜ.கவைச் சேர்ந்தவர்களும் அப்போது கலந்துகொண்டனர். இப்போது பாஜக எதிர்க்கிறது. அதன் இரட்டை வேடம் கலைந்து விட்டது.

**இனாம் நிலங்கள் பிரச்சனையில் திமுக, தவெக அரசுகள்**



திமுக ஆட்சியின் அரசாணைக்கு தடை கேட்ட ராதாகிருஷ்ணன் தவெக அரசின் உத்தரவுக்கும் தடை கேட்டிருக்கிறார். ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவாக பாஜக களத்திற்கு வந்திருக்கிறது. இனாம் நிலங்கள் பிரச்சனையில், தவெக அரசின் நடவடிக்கைகளை, திமுக அரசின் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக எடுத்துக்கொண்டு, இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான சட்டத்திருத்தங்களுக்காக அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக திமுக, இந்துத்வா அமைப்புகளின் கருத்துகளை முரசொலி பத்திரிகையில், அதுவும் முதல் பக்கத்தில் வெளியிடுவது தேர்தலுக்குப் பிந்தைய ‘திராவிட மாடலோ’? என்ற ஆச்சரியம் எழுகிறது.

**ஒரே குரலில் பேசும் இந்துத்துவவாதிகளும், நீதிபதிகளும்:**

ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் டி.ஆர்.ரமேஷ் பத்திரப் பதிவு தடை நீக்கம் பற்றி கூறும்போது,“முதல்வர்(விஜய்) கரூர் வருவதற்குள் இது நடக்க வேண்டும்; கோயில்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை; குறைந்தது 10,000 வாக்குகளையாவது அள்ள வேண்டும் என்பதே நோக்கமாக இருந்திருக்குமோ?” என்று கேள்வி எழுப்புகிறார். உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வெண்ணைமலை இனாம் நிலங்கள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் பி.வேல்முருகன், பி.புகழேந்தி அமர்வு “ஏழை (சில நூறு கோடி ரூபாய் சொத்து மதிப்பு மட்டுமே உள்ள) தெய்வத்துக்கு ஓட்டுரிமை இல்லை என்பதால் கோவில் சொத்துகளை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லையா? அல்லது ஆக்கிரமிப்பாளர்களுக்கு (போராடும் 1200 குடும்பத்தினரும் பொதுமக்கள் அல்லவாம்) ஓட்டுரிமை உள்ளதால் அவர்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லையா?” என்று கேள்வி எழுப்பியது.

**மன்னராட்சி காலத்திய நடைமுறைக்கு தவெக முடிவு கட்ட வேண்டும்:**

மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டு மக்களாட்சி முறை நடைமுறைக்கு வந்தபோது இனாம்தாரி முறை ஒழிக்கப்பட்டு நிலங்கள் இனாம்தாரர்களுக்கு வழங்கப்பட்டன. அதே சமயம் நிலத்தில் நேரடியாக உழைப்பைச் செலுத்திய தலித் நிலமற்ற, ஏழை விவசாயிகளுக்கு இந்தப் பலன்

பெரிதும் சென்றுசேரவில்லை என்ற கசப்பான உண்மையும் இருக்கிறது. எனவே கோயிலின் ஆதிக்கத்திலிருந்து நிலத்தை மீட்டெடுப்பதற்காக பல்வேறுபட்ட வர்க்கப் பிரிவினர் சேர்ந்து நடத்தும் போராட்டங்களை ஆதரிக்கும் அதே சமயம், ஏழை, நிலமற்ற, தலித் பிரிவினரின் வீட்டுமனை, விவசாய நிலம், பொதுப் பயன்பாட்டுக்கான நிலத்திற்கான போராட்டத்தை இடதுசாரிகள் முன்னிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

கரூர் இனாம் நிலங்கள் தொடர்பான ஒரு கேள்விக்கு நீதிமன்றத்தில் பதில் அளித்த கோவில் தரப்பு வழக்கறிஞர் "பத்திர பதிவுக்கு தடைநீக்கம் செய்யப்பட்ட நிலங்கள் 3084.95 ஏக்கர் மட்டுமே; கோவிலுக்குச் சொந்தமாக 15,000 ஏக்கர் நிலங்கள் தனியாக உள்ளன" என்று தெரிவித்திருக்கிறார். கோவில் நிலங்களை அரசு கையகப்படுத்தினாலே கரூர் மாவட்டத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான சொந்த வீடற்ற மக்களுக்கு வீட்டுமனையை உறுதி செய்ய முடியும். உழைக்கும் மக்களைச் சுரண்டிக் கொழுக்கவும், சாதிய சமூகக் கட்டமைப்பைப் பாதுகாக்கவும், மன்னரின் ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்துவதற்குமான ஏற்பாடாக அன்று கடவுளின் பெயரால் கோவிலுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. மக்களாட்சி முறையில் காலத்திற்கு ஒவ்வாத இந்த மன்னராட்சி முறைக்கு தவெக அரசு முடிவு கட்ட வேண்டும்.

**இனாம் நிலங்களை மக்களுக்குச் சொந்தமாக்க, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே சட்டத் திருத்தங்கள் வேண்டும்:**

தவெக அரசு, கரூர் மாவட்டத்தில் உள்ள, அதுவும் வழக்கில் இல்லாத ஒரு பகுதி இனாம் நிலங்களில் மட்டும் மக்களின் நில உரிமையை உறுதி செய்திருக்கிறது. இப்போது இந்த நிலங்களும் நீதிமன்ற வழக்கிற்குள் கொண்டுவரப்பட்டுவிட்டன.

தவெக அரசு அதன் நடவடிக்கையை அடுத்து வரும் கரூர் சட்டமன்ற இடைத் தேர்தல் வெற்றி என்ற எல்லைக்குள் நிறுத்தவிடாமல், இனாம் நிலங்களில் மக்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும், கடமையும் இடதுசாரி இயக்கங்களுக்கு இருக்கிறது. அந்த வகையில் தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து இனாம் நிலங்களிலும், வழக்கில் உள்ள நிலமாக இருந்தாலும் சரி, கோயிலுக்குச் சொந்தமாக்கப்பட்ட நிலங்களாக இருந்தாலும் சரி, அவற்றை மக்களுக்குச் சொந்தமாக்க, கொள்கை முடிவெடுத்து, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று தவெக அரசை இகக(மாலெ) வலியுறுத்துகிறது.

**பக்தர்களின் காணிக்கைகள் கோவிலுக்குச் சொந்தமாகட்டும்! நிலங்கள் மக்களுக்குச் சொந்தமாகட்டும்!**

## எனக்கு நீண்ட காலமாக கோபம் இருக்கிறது. ஆனால், அந்த மாணவர்கள் போலவே கோபத்தோடு நானும் சிரித்தேன் – அருந்ததிராய்

(டில்லி ஜந்தர் மந்தரில் Scroll.in இணைய இதழின் சுப்ரியா சர்மாவின் அருந்ததி ராயுடனான நேர்காணலில் இருந்து சில... தமிழாக்கம் – புவனா )

***நீங்கள் கடைசியாக இங்கு எப்போது வந்தீர்கள்?***

கடைசி நாளுக்கு முந்தைய நாள் இங்கு இருந்தேன். அந்த மனிதர் பதவி விலகியதற்கு முந்தைய நாள்.

***அப்போது நிலைமை எப்படி இருந்தது?***

அங்கே மிக நீண்ட வரிசை இருந்தது; என்னால் கூட்டத்தின் மய்யத்துக்குச் செல்ல முடியவில்லை. வெளியில் சுற்றிக்கொண்டிருந்தேன். முகக்கவசம் அணிந்திருந்தேன். அந்த இடம் குப்பையாக இருந்தது, மகிழ்ச்சி தந்தது. நகைச்சுவை, அரசியலின் சாரம் என்று நான் கருதுகிறேன்.

24 ஆண்டுகளாக பிரதமர் நெருடலான ஒருவராக இருந்திருக்கிறார்; எனவே, இந்த செய்தி ஆசுவாசப்படுத்துவதாக இருந்தது. இப்படியொன்று நடப்பதை பார்ப்பதற்கு முன்பு இறந்துவிடுவேன் என்று நினைத்திருந்தேன். அற்புதம். ஆனால் இப்போது அது சற்று அச்சம் தருகிறது. இப்படி எதுவும் நடக்கவில்லை என்பது போன்ற அமைதி நிலவுகிறது. இதை உண்மை என்றே நம்ப முடியவில்லை. எல்லாம் ஒரு வார காலத்துக்குள் நடந்துவிட்டது. அதற்கு முன்பே அது உருவாகிக்கொண்டிருந்தது. ஆனால் கடைசி வாரத்தில்தான் அது உச்சத்தை எட்டியது.

***தொடக்க நாட்களில் நீங்கள் இங்கு வந்திருந்தீர்களா?***

தொடக்க நாட்களில் வந்தேன். அதன் பிறகு சில நாட்கள் வரவில்லை. தோற்றத்தில் குறிப்பிட்ட ஒரு கோரிக்கையைக் கொண்டதாகத் தெரிகிற இந்த இயக்கம், தீவிரமானவை என்று கருதப்படும் எனது எழுத்துகளுடன் இணைத்துப் பார்க்கப்படக் கூடாது என்று நான் கருதினேன். அதனால்தான் இந்த இயக்கம் இவ்வளவு பரந்த ஆதரவைப் பெற்றிருந்தது. இந்த இயக்கம் என்னுடன் இணைத்துப் பார்க்கப்படாமல் இருப்பதில் நான் கவனமாக இருந்தேன்.

***கரப்பான் ஜனதா கட்சி தொடர்பாக நடப்பவை பற்றி, தொடக்கத்தில் எச்சரிக்கையாக இருந்ததாக கடந்த வாரம் நீங்கள் எழுதிய ஒரு கட்டுரையில், சொல்லியிருந்தீர்கள். அதில் ஏதோ மாற்றம் ஏற்பட்டுள்ளது.***

ஆம். அன்னா அசாரே இயக்கமும், அதில் வலதுசாரிகள் ஊடுருவியிருந்ததும் எனக்கு எச்சரிக்கை உணர்வைத் தந்தன. இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருந்த சில இளைஞர்கள் அந்தச் சூழலில் பயிற்சி பெற்றவர்கள் என்பதும் எனக்குத் தெரியும். என்ன நடக்கிறது, என்ன முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன, என்ன குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன என்று பார்க்க வேண்டும் என்று கருதினேன். என் பெயர் காலித் என்று இருந்திருந்தால், அவர்கள் என்னை போராட்டம் நடத்த அனுமதித்திருக்க மாட்டார்கள் என்று அபிஜித் திப்கே சொன்னபோது எனக்கு நம்பிக்கை வந்தது. மிக ஆழமான ஒரு விசயத்தை அவர் மிகவும் எளிமையாகச் சொன்னார். நாம் அனைவரும் சந்தித்துக்கொண்டிருக்கும் கொடூரமான தேசியவாத, இந்து தேசியவாத வெற்றுப் பேச்சை அது நேரடியாக

எதிர்கொண்டது. அது எனக்கு நம்பிக்கையளித்தது. அப்போதுதான் நான் இங்கு வர முடிவு செய்தேன்.

***எல்லாமே ஒரு நகைத்துணுக்கிலிருந்து தொடங்கியது. அதுதான் இன்னும் நம்ப முடியாததாக உள்ளது. செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட, சன்கிளாஸ் அணிந்த கரப்பான் பூச்சியின் படத்துடன், சமூக ஊடக நையாண்டியாகத்தானே இது தொடங்கியது?***

இந்த மிகப்பெரிய விவாதத்தில், சில விதங்க ளில், பிரதான ஊடகங்களால் ஓரஞ்சாரத்திற்கு தள்ளப்பட்ட வர்களாக, சாத்தான்மயமாக்கப்பட்டவர்களாக இருந்த நம் அனைவருக்கும் இது புதிது. இது கட்டமைக்கப்பட்ட விதங்கள் புதிது. இதிலிருந்தும், இவர்களிடமிருந்தும் மக்கள் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

அவர்கள் நமக்கு ஒரு பரிசைக் கொடுத்திருக்கிறார்கள். அது என்னவாக மாறப்போகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதன் இலக்கை விட கூடுதலாகவே அது சாதித்துவிட்டது. ஏனென்றால், கல்வி அமைச்சர் பதவி விலக வேண்டும் என்பது ஒரு வகையில் ஒரு சம்பிரதாய கோரிக்கை. அதை வென்றுவிட்டார்கள். ஆனால், நமக்குத் தெரியும்; புதிய கல்வி அமைச்சர் வந்திருக்கிறார்; ஏய், நீதான் புதிய கல்வி அமைச்சர் என்று அவருக்குப் பணிக்கிறார்கள். இப்படித்தான் அவர்கள் செயல்படுகிறார்கள். மலக்குன்றின் மேல் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய அடையாளம் தட்டிவிடப்பட்டு, அதற்குப் பதிலாக இன்னொரு அடையாளம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மலக்குன்று அப்படியே இருக்கிறது. கல்வியை மட்டுமே எடுத்துக்கொண்டாலும், தனியார்மயம், வினாத்தாள் கசிவு, நீட்.... எல்லாம் தொடர்கிறது.

தலித், பிற்படுத்தப்பட்ட பிரிவுகளின் மாணவர்கள் அங்கிருந்து படிப்படியாக வெளியேற்றப்படுகிறார்கள். ஒட்டுமொத்த பாடத்திட்டமும் ஒருவித முடக்குவாதமாக மாற்றப்பட்டுள்ளது. அவர்கள் முட்டாள்களை உருவாக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் அதில் தோற்றுப் போகிறார்கள். ஏனென்றால், வீதியில் திரண்ட இந்த இளம் தலைமுறை, அளவுகடந்த நகைச்சுவை உணர்வும் நம்ப முடியாத திறனும் கொண்டது என்பதை காட்டியிருக்கிறது. ஆனால் அமைச்சகத்தில், கல்வி முறையில், இன்னும் தீர்க்கப்படாமல் பல பிரச்சனைகள் உள்ளன. பதவி விலகிய அமைச்சரை பாஜகவின் சமூக ஊடகக் கணக்குகள் பாராட்டுகின்றன. அவர் அவமானப்படுத்தப்பட்டு பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டவர்; ஆனால், மாணவர் நலனுக்காகத் தியாகம் செய்த தியாகி போல அவரை காட்டுகிறார்கள். இரண்டு பக்கங்களிலும், ஆட்டம் இப்போதுதான் தொடங்குகிறது. அப்படித்தான் நான் நம்புகிறேன்.

***இந்தத் தலைமுறை அளவுகடந்த நகைச்சுவை உணர்வு கொண்டது என்று நீங்கள் சொன்னீர்கள். ஊடகங்கள், திரைப்படங்கள், பாடப்புத்தகங்கள் மூலம் அவர்களுக்கு பெரிய அளவில் தகவல்கள் புகுத்தப்பட்டுள்ளன. இதையெல்லாம் அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டு அவற்றின் ஊடாகப் பார்க்கிறார்கள்?***

தொடக்கத்தில் இந்த இயக்கம் அவ்வளவு தேர்ந்து தெளிந்ததாக இல்லை. மிகவும் சாதாரணமானதாக இருந்தது; அந்தக் குழந்தைகள் எதுவும் செய்துவிட முடியாது என்று பலரும் கருதினார்கள். ஆனால், அவர்கள் செய்து முடித்தார்கள். பரப்புரை சீக்கிரமே காலாவதியாகிவிடும். டில்லியில் வீடுகளும் குடிசைகளும் புல்டோசர்களால் இடிக்கப்பட்ட போதும், நாங்கள் மீண்டும் மோடிக்கு வாக்களிப்போம் என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். ஆனால், அவர்கள் சொன்னதை செயல்படுத்த முடியுமா என்ற கேள்வி வருகிறது; ஏனென்றால், மறுபுறம் யதார்த்தம் இருக்கிறது. மோடியின் பக்தர்களாக இருக்கும் பெற்றோர்கள்கூட தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலம் அழிக்கப்படுவதைப் பார்க்கிறார்கள். நீட் அல்லது மற்ற தேர்வுத்தாள் கசிவுகளுக்கு எதிராகப் போராடுகிறீர்கள். ஆனால் மருத்துவமோ, பொறியியலோ, வேறு எந்தப் படிப்பாக இருந்தாலும், ஐந்து ஆண்டுகள் படித்து முடித்த பிறகும் வேலைவாய்ப்புகள் இல்லை.

***அப்படியானால், உங்கள் எதிர்கால வாய்ப்புகள்தான் என்ன?***

எதிர்கால வாய்ப்புகள்தான் என்ன? பழங்குடியினர் தங்கள் நிலங்களில் இருந்து அகற்றப்படுவது பற்றி நாம் எழுதுகிறோம். இப்போது நர்மதையின் நீர்மட்டம் உயர்கிறது; அந்த வெள்ளம் நடுத்தர வர்க்கத்தையும் எட்டியுள்ளது. தனியார்மயம் மய்யப்படுத்தப்படுவதால் வணிகர்களும் கூட பாதிக்கப்படுகிறார்கள். அதானி அம்பானி தவிர மற்றவர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள். விவசாயிகள் இயக்கத்தின் போது ஒருவர் சொன்னார்: நாட்டை நான்கு பேர் நடத்துகிறார்கள்; இரண்டு பேர் வாங்குகிறார்கள்; இரண்டு பேர் விற்கிறார்கள்; அந்த நான்கு பேரும் குஜராத்திகள் – நரேந்திர மோடி, அமித்ஷா, கவுதம் அதானி, முகேஷ் அம்பானி. இது உருவகம் அல்ல. இது உண்மை.

அழுகல் எல்லா இடங்களிலும் இருக்கிறது. புள்ளிவிவரங்கள்கூட பொய்களாக இருக்கின்றன. அவர்கள் தங்களுடைய பொய்களையே, தங்கள் பொய்ப் பிரச்சாரத்தையே நம்பத் தொடங்குகிறார்கள். எனது மனதில் இருக்கும் கேள்வி என்னவென்றால்: தன்னைப் பற்றி என்ன சொல்லப்படுகிறது என்பது மோடிக்குத் தெரியுமா? அல்லது அவை பற்றி அவருக்குத் தெரிவதே இல்லையா? பிரதமராக இருக்கும் நீங்கள் எப்படி கேலிக்குள்ளாகிறீர்கள் என்பது பற்றி உங்களைச் சுற்றியுள்ள அனைவருக்கும் தெரிகிறது. உங்களுக்குத் தெரியவில்லையா? அல்லது தெரியுமா?

இந்த இயக்கத்தின் மிகப்பெரிய சாதனை என்னவென்றால், 24 ஆண்டுகளாக, உண்மையில் 2002ல் இருந்து, தனது பிம்பத்தை மிகவும் கவனமாக உருவாக்கிய, பத்திரிகையாளர் சந்திப்பையே எதிர்கொள்ளாத , ஒரு டெலிப்ராம்ப்டர் உதவியுடனோ அல்லது ஒரு துண்டுச் சீட்டின் உதவியுடனோ பேசிக்கொண்டிருக்கும் ஒருவர், இன்னமும் விஷ்வ குரு, விஷ்ணுவின் அவதாரம் என்று எல்லாம் அழைக்கப்படுகிற ஒருவர், திடீரென்று இரண்டே வாரங்களில் இந்தக் குழந்தைகளால் உரித்துப்போடப்பட்டுவிட்டார். இன்ஸ்டா கிராம் இப்போதுதான் வந்தது. ஆனால், வரலாற்றில் இதுவரை எந்த ஒரு மனிதரும், இந்த அளவுக்கு ஏளனம் செய்யப்பட்டதில்லை.

அப்படியானால், அவர் எப்படி வெளியே வந்து மக்களை எதிர்கொண்டு மீண்டும் அதே முட்டாள்தனமான விசயங்களையெல்லாம் சொல்லப்போகிறார்? அவரது பழைய உரைகளை மீண்டும் வெளியே எடுத்து அவர்கள் ஏளனம் செய்தார்கள்; உருண்டு புரண்டு சிரித்தார்கள். இது முந்தைய தலைமுறையையும் கொஞ்சம் முட்டாள்தனமானதாகக் காட்டுகிறது. ஏனென்றால், நீங்கள் உண்மையிலேயே இந்தக் குப்பையையெல்லாம் விழுங்கினீர்கள் அல்லவா?

என்னைப் பொறுத்தவரை, இது ஒரு தேர்தலில் வெற்றி பெறுவதைவிடப் பெரிய விசயம். தெளிவாக சராசரி அறிவாற்றல்கூட இல்லாத, நமது பிரதமராக இருக்கும் ஒருவரைச் சுற்றி உருவாக்கப்பட்டிருந்த அறிவற்ற சுவரை அகற்றிவிட்டார்கள்.

# வலியை மறக்க மாட்டோம்! வரலாற்றை மறக்க மாட்டோம்!
# தேர்தல் வாக்குறுதிப்படி தூய்மைப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்!

சென்ற ஆண்டு, ஆகஸ்ட் 13 அன்று, சென்னை ரிப்பன் மாளிகை வாயில் முன்பு அமைதியாகப் போராடிக் கொண்டிருந்த தூய்மைப் பணியாளர்களை காவல்துறை கொடூர அடக்குமுறையை ஏவிவிட்டு அப்புறப்படுத்தியது. போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தோழர் பாரதி உள்ளிட்ட தலைவர்கள், ஆண், பெண் தொழிலாளர்கள் மீது பொய் வழக்குப் போட்டது.

"நிரந்தரம் என்பது இல்லையேல் சுதந்திரம் என்பது இல்லையே" என சென்னையில் சென்ற ஆண்டு முழங்கிய அதே முழக்கத்தை இந்த ஆண்டு ஆகஸ்ட் 13 அன்றும் ஓங்கி முழங்கிய தூய்மைப் பணியாளர்களின் மாபெரும் பேரணியும் பொதுக்கூட்டமும் சென்னையில் நடைபெற்றது. சென்னை பெருநகரத்தைத் தாண்டி, திருவள்ளூர், கோவை, சேலம், நாமக்கல், தர்மபுரி, கடலூர், தூத்துக்குடி, தென்காசி, தஞ்சாவூர், திருப்பூர், ஈரோடு, மயிலாடுதுறை மாவட்டங்களில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வந்து கலந்து கொண்டனர்.

ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக பணிபுரிந்தவர்களை பணி நிரந்தரம் செய்வோம் என தவெக தேர்தல் வாக்குறுதி H3 அளித்திருந்தது. அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், கழிவகற்றுதலை இயந்திரமயமாக்க வேண்டும், தொழிலாளர்கள் அனைவருக்கும் வார விடுமுறை, பண்டிகை விடுமுறை அளிக்க வேண்டும்; பெண்களுக்கு மகப்பேறு கால விடுப்பு வழங்க வேண்டும்; பணியிடத்தில் கழிப்பிட வசதி, உடைமாற்றும் இடவசதி செய்து கொடுக்க வேண்டும்; அரசாணை 62ன்படி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, உள்ளாட்சிப் பள்ளிகளில் வேலை செய்யும் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டும், சென்னை ரிப்பன் மாளிகை கட்டிடத்தில் தொழிற்சங்க அலுவலகத்துக்கான இடம் வழங்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து பேரணி நடைபெற்றது.

பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஏஐசிசிடியு ஆலோசகர் தோழர் எஸ்.குமாரசாமி, சென்ற திமுக அரசு ஆட்சி முடியும் தருவாயில் தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் துவங்கியதைத் தொடர்ந்து, பல்வேறு பிரிவு மக்களும் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த ஏழைகளின் கண்ணீர் திமுக அரசாங்கத்தின் அரியணையை அரித்துவிட்டது என்று குறிப்பிட்டார். புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கிற விஜய், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும். அருந்ததியர், ஆதிதிராவிடர், அனைத்துச் சாதி ஏழைகள், பெண்கள் ஆகியோராக இருக்கிற தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், குறைந்தபட்ச ஊதியத்திற்காக உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்குகள் பற்றியும் அதில் தமிழ்நாடு அரசாங்க தரப்பு மேற்கொண்டு வரும் வன்மமான, வக்கிரமான அணுகுமுறை பற்றியும் கடுமையாகச் சாடினார். பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் தூய்மைப் பணியாளர்கள் அவ்வளவு வேலைகள் பார்த்துவிட்டு அதிகபட்சம் ரூ.3400 ஊதியம் பெறுகிறார்கள் என்ற பத்திரிகை செய்தியைச் சுட்டிக்காட்டினார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வளங்கள் துறை அமைச்சராகவும் இருக்கிற முதலமைச்சர் விஜய், தூய்மைப் பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உழைப்போர் உரிமை இயக்கத்தின் மாநிலத் தலைவர் பாரதி, தனது உரையில் சென்றாண்டு வங்கக் கடலில் இறங்கி போராடியது முதல், கூவம் நதியில் இறங்கி போராடியது வரை மேற்கொண்ட போராட்ட நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டி, வரும் காலங்களிலும் கோரிக்கைகளை வென்றெடுக்க எத்தகைய போராட்டத்திற்கும் செல்ல உழைப்போர் உரிமை இயக்கம் தயங்காது என்றார். விண்ணில் பாதியாக மண்ணில் பாதியாக இருக்கும் உழைப்போர் உரிமை இயக்கப் பெண்கள் பகத்சிங் வழியில் அம்பேத்கர் வழியில் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட போராடுவார்கள் என்றார். சட்டமன்றத்தில் உதயநிதி ஸ்டாலினுக்கும், ஆதவ் அர்ஜுனாவுக்குமிடையே நடக்கும் லாட்டரி மார்ட்டினுடைய 900 கோடி பணப்பரிமாற்ற விவாதத்திற்கும் மக்கள் நலனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்ற அவர், உண்மையான உழைக்கும் மக்கள் நலனிலிருந்து அவர்களுடைய கோரிக்கைக்காக உழைப்போர் உரிமை இயக்கத்தின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு நடைபெற்று வருகிறது என்றார். சென்னையின் பூர்வகுடி மக்கள், தங்கள் வாழ்வாதாரத்துக்கான, எதிர்காலத்துக்கான போராட்டத்தை யார் ஆட்சியில் இருந்தாலும் தொடர்வார்கள் என்றார். எதிர்க்கட்சியாக இருந்தபோது தூய்மைப் பணியாளரின் கோரிக்கைகளைக் கேட்ட இன்றைய முதலமைச்சர் விஜய் தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கை மீது அழைத்துப் பேச வேண்டும் என்றார்.

உழைப்போர் உரிமை இயக்கத்தின் கடுமையான முயற்சிகளால் தூய்மைக் காவலர்களின் ஊதியம் 5000 ரூபாயிலிருந்து 6000 ரூபாயாக உயர்த்தப்பட்டதைக் குறிப்பிட்ட




தோழர் ஏ.கோவிந்தராஜ், அரசாணை 62படி ஊதியம் பெறுவதற்கான போராட்டங்கள் தொடரும் என்றார்.

கூட்டத்தில் ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் தோழர் சகாயம், அகில இந்திய தூய்மைப் பணியாளர் கூட்டமைப்பின் துணைத் தலைவர் தென்காசி வேல்முருகன், சேலம் ஏ.வேல்முருகன், கோவை வள்ளி, விருத்தாச்சலம் ராஜசங்கர், தர்மபுரி கோவிந்தராஜ், மயிலாடுதுறை வீரச்செல்வன், சென்னை ஜோதி ஆகியோர் உரையாற்றினர். மின்வாரிய தொழிற்சங்கத் தலைவர் முருகன், சிபிஐஎம்எல் தஞ்சாவூர் மாவட்டச் செயலாளர் மாசிலாமணி, சென்னை மாவட்டச் செயலாளர் ஜேம்ஸ், ஏஐசிசிடியு மாநில நிர்வாகிகள் தேசிகன், இரணியப்பன், சுரேஷ், முனுசாமி, மோகன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் பிலோமினா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதல்வர் விஜய், தூய்மைப் பணியாளர்களை நேரில் சந்தித்துப் பேசவும் பணி நிரந்தரம் செய்யவும் வலியுறுத்தி 20.08.2026 அன்று சென்னை மாநகராட்சி முன்பிருந்து கோட்டை நோக்கிப் பேரணி நடத்தி, கைதானார்கள். இதே கோரிக்கையை வலியுறுத்தி 21.08.2026 அன்று தூய்மைப் பணியாளர்கள் பெரியார் (சிலை) இடம் மனு கொடுக்கும் போராட்டத்தை நடத்தினார்கள். 22.08.2026 அன்று அம்பேத்கர் (சிலை) இடம் மனு கொடுக்கும் போராட்டம் நடத்தினர். 23.08.2026 அன்று முதல்வரைச் சந்திக்க பேரணி சென்றதால் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டார்கள். திமுக ஆட்சியின் கடைசி காலத்தில் நடந்த தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் போனதற்கு காரணமாக அமைந்தது. கடந்த ஆண்டு நடந்த போராட்டத்தின் போது தவெக தலைவர் விஜய் தூய்மைப் பணியாளர்களைச் சந்தித்தார். தற்போது முதல்வர் விஜய் தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்க ஏன் தயங்குகிறார்? என வாக்களித்த மக்கள் கேட்கிறார்கள்

**– தேசிகன்**







MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17









Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**